Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேள்ளாளர் தேரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ௌ ஆகஸ்டு மீ 23உ [No. 34.

2 0 NOV 1928

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	661
2.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	663
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	665
4.	தமிழ்ப் பாடம்	667
5.	தேவாரமும் ஐந்திணையும் E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L.	669
6.	பிளாதன், T. R. இராஜகோபால்	672
7.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	673
8.	அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர் B. A.	676
9.	வர்த்தமானம்	679

கலா நிலயம்.

இசைக் கலைக் கழகம்.

இசைக்கலைக் கழகமொன்று இச்சென்னை நகரில் நிறுவப்பெற்ற நற்செய்தியை இப்பத்திரிகை இதழின் மற்றோரிடத்தில் தந்துள்ளோம். கலைகளின் வளர்ச்சியில் ஆர்வமுடைய மேன்மக்கள் யாவரும் எம்மோடு அக்கழகத்தை மிகவுவந்து வரவேற்பர் என்பதற் கையமில்லை. அக்கழகத்தைத் துவக்கி வைத்த ஸர். ஸி. பி. இராமசுவாமி ஐயரவர்கள், நாட்டினது நன்மைக்கு அரசியல்முறைகள் சீர் பெற்றோங்கி வருமாறு முயல்வது எத்துணை அவசியமோ, அத்துணை அவசியம், இலக்கியம் சங்கீதம் முதலிய துறைகள் தெளிவுற்று எங்கும் பரவுவதுமாகும் எனச் செவ்விதின் ஓதினார். கலையினதகலமும் அரசியலனுபவமும் ஒருங்கே பெரிதளவு எய்தியுள அன்னார் கூற்று யாவர் கருத்திலும் ஆழக் கொள்ளத்தக்கது. நலம் பயக்கும் தன்மையில் அரசியலமைப்பிற்கும் கலையினதாற்றலிற்கும் ஒரே படித்தாய அவசியம் ஸர். ஸி. பி. இராமசாமி ஐயரவர்கள் அளிப்பாராலும், எம்மைக் கேட்டால், "கலைவளமே இன்று கரைபுரண்டு நம் நாடெங்கும் பெருகட்டும், அரசியலும் குடிவாழ்க்கையும் இவையனைய பிறயாவும் மறுநாள் பார்த்துக்கொள்வோம்" என்று இறையுந் தாழாது இயம்புவோம். மற்று, ஸர். ஸி. பி. இராமசுவாமி ஐயர் ஏன் அவ்வாறு கூறினாரென்றாலோ, தக்க காரணமுளது. அப்பேரறிவாளர் அறியாது கூறினாரல்லர். அவர் மொழி அறிவுடைத் தென்றதால் எம் கொள்கையும் பழுதாகாது.

ஆங்கிலம் வடமொழி பிரன்சு முதலிய பாஷை இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சியும் அவைகளை அனுபவிக்கும் நலமும் பெற்றவர் அவர். இவ்விலக்கியக் கலைகளின் கூட்டுறவால் அவர் மனம் அகன்றுளது. அகன்ற அம்மனத்தால் அவர் எதனையும் ஆராயவல்லவர். அவ்வாராய்ச்சியால் அவர், அரசியல் முறைகள் நன்கமைந்து நடக்குமாயின் மாந்தர்களுக்கு அதனால் விளைவதற்குள உண்மையாய உதவியும் பெருமையும் உய்த்துணர்கின்றார். போலிமுறை இதுவென்றும் அரசியலில் வாய்மைமுறை இதுவென்றும் தெள்ளிதின் தெரிந்துகொள்ளுதற்கு வேண்டிய நிலை அவர் மனம் கலையின் தூய்மையால் கற்றுளது. அரசியல்முறைகள் ஒருதேசத்திற்கு நன்கமைக்கப்பட வேண்டுமென்பது பெரும்பான்மை உண்மையே. கலையின் பெருமையை அநுபவித்துளாராகையால் அவர் அரசியலின் பெருமையையும் அறியக் கூடியவராயிருக்கின்றார். ஆனால், அரசியலமைப்பைப்பற்றிப் பலவாறு வாதாடுவாரெல்லாரும் கலைகளின் பெருமையை அறிந்துளரென்றேனும், அறியக் கூடியவர்களென்றேனுஞ் சொல்வதற்கில்லையே. கலையினது பயிற்சியாலும் உணர்ச்சியாலும் விசாலமடையாத மனிதர் அரசியல் முறைகளை வகுப்பதற் கருகரல்லர். பல் கலைபயின்ற மேன்மக்கள் உண்மையாய் உதவவல்ல முறைகளை வகுப்பினும், கலையுணர்ச்சி குன்றிய மாந்தர் அவைகளை ஏற்பதற்கு மருகரல்லர். ஆதலால் இருதிறத்தோரும் முதலில் கலையுணர்வு பெருகப்

பெற்று விளங்குவாராயின் அவர்களுக்கேற்ற அரசியல்முறைகள், எமர்ஸன்போன்ற ஆன்றோர் செப்பியபடி, தாமே வந்து அமையும். ஆதலால் நாம் கலையின் வளர்ச்சிக்கியன்ற கருமங்களையே முன்வைப்போம்.

இவ்விதம் கலையினதாட்சியை முன்வைக்காமல் அரசியலோடு இணைப்போமாயின், நடைமுதலில் பலவித தீங்குகள் நேரும். சென்னையில் அரசியற் கட்சி ஒன்றைச்சார்ந்த தலைவர் ஒருவர் சிறிது காலத்திற்குமுன், ஒரு கலாசாலை வெகுமதியளிக்குங் கொண்டாட்டத்தில் பேசியபோது கல்வியின் அவசியத்தைக்காட்ட முயன்றவராய்க், கல்லாதவன் வோட் எடுக்கும் கடிதத்தில் தான் நினைத்தபேரிற்கு எதிரே சரிவரக் குறிபோட இயலாதன்றோவென வெகு உருக்கமாய் வினவினார். வாழ்நாளின் பண்பும் பயனும் எல்லாம் வோட்கொடுக்கும் கடிதத்தில் குறிபோடுவதோடு அவருக்கு முடிந்துவிட்டது கலையும் கல்வியாய், அக்கல்வியும் பள்ளிக்கூடப் பாடமாய், அப்பாடமும் பேர்படிக்கும் போராற்றலாய்த் தேய்ந்துபோவது, கலைப்பயிற்சியில்லாதார் அதனை அரசியலிற்கு இணையென்றேனும் துணையென்றேனும் விவகரிக்கப் புகுவதால் நேருமென்பது நிச்சயம். ஆதலாற்றான், ஸர். வி. பி. இராமசிவாமி ஐயர் கூறியபடி கலைகளும் அரசியல்முறைகளும் ஒரு நாட்டிற்கு ஓரே படித்தாய அவசியமானவைகளாய் முடிவில் ஆனாலும், இக்கால நிலைமையை நினைக்குங்கால் நாம் கலைகளுக்கே முதலிடம் தருவது தக்கதெனச் செப்புகின்றோம்.

ஸர். வி. பி. இராமசுவாமி ஐயரவர்கள் இன்னொரு வாசகம் உண்மையாக விளம்பினார். அதுயாதெனில், தற்காலப் பாடசாலை மாணவர்களின் வாழ்க்கை, பசையும் பசுமையுமற்றுப் பாலைவனமாய்க் கிடக்கின்றதென்றும், இசைச்சுவை அவர்களுக்கேற்படுத்தினால் அவர்கள் வாழ்வு பொருளும் ஊக்கமும் பயனும் உடையதாகும், என்பதே. பாலைவனமாய்க் கிடக்கின்றதென்று இவர், தற்கால மாணவர்களில் தமக்கமைந்த பாடத்தையேனும் படித்துக்கொண்டு வருகின்ற சிறு பகுதியையே கருதிச்சொன்னார் என்று நினைக்கின்றோம். கடந்த ஏழெட்டு ஆண்டுகளுக்குள் பாடசாலைப் பிள்ளைகளின் பெரும்பகுதியோர் வழக்க ஒழுக்கங்கள் கெட்டுப்போயிருக்கின்ற அளவை நினைக்குங்கால், அவர்களின் வாழ்க்கையைப் பாலைவனத்திற் கொப்பிட்டால் அமையாது. ஊரிலிருந்து வருவதற்குப் பணமும், அதை இழப்பதற்கு வருடம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் குதிரைப் பந்தயமும், அழிப்பதற்குச் சிற்றுண்டிக் கடைகளும் சினிமாவும், வருடத்திற்கு, ஒன்றுபோக, இரு முறைத் தவறுதற்குப் பரிக்ஷையும் இருக்கின்றவரையில் அவர் வாழ்கின்ற வாழ்வு பாலைநிலமாவானேன். முள்ளும் கள்ளியுமடர்ந்த காடென்றேனும், அழுகிக் குழம்பிய சேறென்றேனும் செப்பல்வேண்டும். நமது கலாசாலைகளில் கலைகள் தவிர மற்றவெல்லாம் கற்பிக்க நினைப்பதால் வந்த வினை இது. இன்னார்க்கிடையில் சங்கீதம் நிலவத் தலைப்படுமாயின் பாலையுந் தளிர்க்கும், சேறுந் தெளியும், என்பதற்குச் சிறிதேனும் ஐயம் இல்லை. இவ்வுரை கூறியதற்கு நாம் ஸர். வி. பி. இராமசுவாமி ஐயரவர்களை மனமார வாழ்த்துகின்றோம். கல்விச்சாலை அதிகாரிகள் இதற்கிணங்கிய ஏற்பாடுகள் செய்வாராயின் பின்னாள் இந்நாடு அவர்களைப் பெரிதும் வாழ்த்தும்.

கலைகளுக்கு ஒக்க ஆட்சிமுறைகளைக் கருதுவதால் விளைகின்ற இவ்விபத்தைப்போலவே இன்னொரு துறையிலும், கொள்கை நேரிதாயிருப்பினும், கையாளும் வகையில் ஆபத்து நேரக் காண்கின்றோம். கல்விச்செல்வம் பொருட்செல்வம் என இவ்விரண்டும் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாயினும், பொருளை ஈட்டவேண்டும் என்னும் நினைவுகொள்ளாமலே கல்வியை மாத்திரம் கருதி விவகரிப்பதே உத்தமம். பொருட் செல்வத்திற்கியன்ற, வர்த்தகம் கைத்தொழில் மற்ற தனதாய முறைகளுக்குக் கல்வியோடு சரியாசனம் கொடுப்போமாயின் மெள்ள மெள்ள முன்போலவே, பொருளின் நினைவு உயர்ந்து கலையின் உணர்வு தாழ்ந்து பொருள் செய்வார்க்குக் கலைகள் ஓர் சாதனம் என்னும் சிந்தனை தோன்ற யாவுங் கெடுகின்றன. இக்காலப் பாடசாலைகளில் ஓதும் பாடங்களும், ஓதுவிக்கும் பெற்றோரும், ஆசிரியர்களும் கற்கும் மாணவர்களும், யாவரும் பொருள் செய்வதற்கு ஓர் வழியாகக் கருதி நடப்பதால்தான் ஸர். வி. பி. இராமசுவாமி ஐயர் கூறியபடி பாலைப்பாழாகச் சிலரும், நாம் சொன்னவிதம் அழுகிய சேறாகப் பலரும் தம் வாழ்நாள் அழியக் காண்கின்றனர்.

ஆதலின் கலைகளுக்கே முதலாசனம் அளித்து மற்றவைகளையெல்லாம் கடைவாயிலில் நிற்கவைத்தலே நாட்டின் நலத்திற்கு நன்கமைந்தது. இக்கலையுணர்ச்சியை ஒருவனுள்ளத்தில் தூண்டி வைத்தற்கு இசையின்பால் சுவை பயிற்றுவித்தல் சீரிது. அவனவன் உழன்றுவருகின்ற நிலைமைக்கு மேலானவோர் நிரந்தர வாழ்க்கை உளதென்னும் இலக்ஷியத்தைக் குறிப்பினிற் புகட்டிவைத்தல் கலைகளின் திறம். அறவுரைகள், அறிவுநூல்கள், சமயப் பிரங்கங்கள் யாவும் இந்த இலக்ஷியத்தையே வெளிப்படையாகக்கூறிப் போதிக்கின்றன ஆயினும் ஒன்றினை வெளிப்படையாய் விரித்துக் கூறுவதைக் காட்டிலும் குறிப்புணர்த்திப் போதலே மனதிற் பதிந்து ஊக்கவல்லது. நேராக நோக்குதலினும் கடைக்கண் பார்வைதான் அன்பின தார்வத்தை அதிகப்படுத்தும் என்பர் கடைக்கண்ணால் மேம்படு இலக்ஷியங்களின் அருமையைக் குறிப்புணர்த்தும் கலைகளே கொள்ளத்தக்கன. இக்குறிப்பைச் சில சொற்களால் உணர்த்தும் காவியங்கள். உணர்த்துமெனினும் அதனை உணர்வதற்கு ஆதாரமாய்ச் சிறிது மொழிப்பயிற்சி முதலில் வேண்டியிருக்கின்றது. இசையோ வெனின், முன் பயிற்சி ஒன்றும் இல்லாக்காலையும் ஓசைவடிவத்தால் இவ்வுயரிய இலக்ஷியத்தின் உணர்ச்சியைப் பாமரர்களுக்கும் ஓரளவு ஊக்க வல்லதாய் இருத்தல்பற்றி, மொழிக்கலையாய காவியங்களினதருமையை எய்தப்பெறாதார்க்கும் ஒலிக்கலையாய சங்கீதம் உடனின்று உதவுதற்கு ஏற்றதாம்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

7. தாடகை வதைப்படலம்.

(656-ம் பக்கத் தொடர்ச்சி.)

கம்பரைக் கடத்தல் புலவருக் கருமை.

கருதிய கதிரோன் கருத்தையும், பகருவோர் நாவையும் சுட்டழிக்கும் வெம்மையையும், வஞ்சனைக்காளாகிப் போருடைந்த வீரரின் நெஞ்சத்தினின்றுநீங்காத கொதிப்பையும், பசையற்ற மனத்தராய மூத்தருக்கும் வேசியற்கும் நிகரான வறட்சியையும் உடையதாய அக்கடுஞ்சுரத்தைக் கண்ணுற்ற காகுத்தன் கரைசெய்ய அரியதொரு வியப்பெய்தி,

சுழிபடு கங்கையந் தொங்கன் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறு தானுண்டோ
பழிபடா மன்னவன் படைத்த நாட்டினுங்
கழிவதென் காரண மறிஞ கூறென்றான்.

[சுழித்தலைக்குங் கங்கையையும் அழகிய கொன்றை மாலையையும் அணிந்த முடியையுடைய சிவபிரானின் நெற்றிக்கண் பட்டே தான் இவ்விடமும் வெந்துபோயிற்றோ. அல்லது காரணம் வேறு ஏதேனும் உண்டா. பழியொன்றும் இல்லாத எம்தந்தை தயரதன் படைத்த நாட்டிற்குள் இவ்விடம் அழிந்து கிடப்பதற்குக் காரணம் யாதென்று, எல்லாம் அறிந்த முனிவனே, கூறுவாய், என்றனன்.]

இராமன் தனக்கு ஏற்றவாறே கேட்டான். மனுமுதல் தயரதன் ஈறாக உலகத்தை ஓர் பழியின்றிக் காத்தளித்த மேன்மையோர் குலத்தில் வந்துதித்த இத்திருச்செல்வனுக்குக் கோனிலை திரிந்தாலன்றி நற்புனல் நாட்டிலெங்கும் தீப்படுகாடாகா தென்னும் அறிவு இரத்தத்தோடுடன் பிறந்த இயற்கையாம். பழிபடா மன்னவன் படைத்த நாட்டினுள் அழிபடக்கிடக்கு மிவ்விடம் அமைந்த தெவ்வாறு, என்று பேசியசொற்கள் அரசச்சிறுவன் இராமன் சொன்னவையல்ல. வந்தது அவன் வாய்வழியானாலும் கதிரவனின்தொல்குல மரபே பேசிற்றென்னல் வேண்டும். வசிட்டரனைய குருவர்களிடம் கற்ற கல்வியால் தன்வயதிற்கும் அநுபவத்திற்கும் தகாத நுண்மையோடு இன்னபடிஊகித்தான் இராமன்என்பது உண்மையேயானாலும், அவனது குலத்தறிவே முன்னின்று இவ்வுரை தூண்டியதென்பதும் தக்கதே. இவ்வாறு கூறுவதின் பொருத்தம், அடுத்தபடி அவன் கொண்ட ஐயத்தால் நன்கு விளங்கும். "விரிசடை அண்ணல் விழிபட வெந்ததோ" என்பான். இது கேள்வியறிவு. ஈசனார் காமனைத் தீய்த்த செய்தியைக் கோசிகன் முந்தினம் கூறக் கேட்டுளான் இராமன். இக்கேள்வியறிவை உடனே இராமன் பயன் படுத்தி, "இந்நிலம் அழிந்ததற்குச் சங்கரனின் நுதல்விழி உமிழ்ந்த கனல் காரணமாயிருத்தலுங்கூடும்" என ஊகித்தது அவன் பிள்ளைமதியின் அழகிற்கிணங்கித் திகழ்கின்றது. ஆதலால், இராமன் கொண்ட ஐயங்கள் இரண்டினுள் முதலது, அவனின் குலத்திற்கும் கல்விக்கும் ஒத்தது; பின்னது கேள்விக்கும் வயதிற்கும் ஏற்றது. இவ்விரண்டோடு நின்றிருப்பானாயின் அவனது குலம், கல்வி, வயதிற்கேற்ற அநுபவத்தால்வினவும் பிள்ளைமதி, இவைகளின்பெருமையைக் காட்டுவதுடன் நின்றுவிட்டுப் புத்தியின் விசாலத்தைக் குறிக்காத குறை தோன்றி இருக்கும். தனக்கெட்டிய அறிவினால் தெரிந்ததற்கு மேல் ஒன்று இருக்கவும் இயலும் என்னும் நினைவு புத்திவளர்ந்து வருகின்ற மாந்தருக்கே இயற்கையாயுரியது. தாம் கண்டதோடு காண்பதற்கிருக்கும் காட்சியாவும் முடிந்ததெனும் கொள்கையர் மூடமதிப் புன்மையோர். பெற்ற அறிவுகொண்டு மேல்பெறுதற்கவாவும் மனமுடைய மேன்மையோன் இராமனாகையால், தான் தெரிந்துள அளவு வினவியதல்லாமல், "வேறுதான் உண்டோ" என்றும் கேட்க நேர்கின்றது. கம்பரே இராமனாகத் தன்னை மாற்றிக்கொண்டு கோசிகனையும் எதிர்வைத்துக் கேட்டிருந்தாலன்றி இக்கூற்றினில் இத்தனை நயமும் பொருத்தமும் அடங்கியிருத்தல் இயன்றிராது. இதுதான் நாடக உணர்ச்சி. இவ்வாறின்றிப் புறத்திருந்து இராமனை ஒன்று கவி கேட்கவைத்திருப்பாராயின், இவ்விருத்தத்தில் அளவடி நான்கல்லால் வேறுசில காண்பதற் கமைந்திரா.

இன்னவாறு இராமன் வினவவும், விச்வாமித்திரன் அடியும் நுனியும்விட்டுத் தாடகையின் செய்தியை இடையே எடுத்துச் சொல்லத் துவக்குகின்றான். கேட்பவர் அயராது ஆர்வத்தோடு கேட்பதற்கு ஏற்றமுறை இதுவே. இராமன் கேட்டதற்கும் தான் சொல்வதற்கு முள்ள தொடர்புகூடக் காட்டிலன். அவன் பேரையும் முதலிற் சொல்லவில்லை. மற்று,

என்றலு மிராமனை நோக்கி யின்னுயிர்
கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் றோற்றத்தள்
அன்றியு மையிரு நூறு மையன்மா
ஒன்றிய வலியின ளுறுதி கேளென

[காரணம் யாதென இராமன் கேட்டதும் விச்வாமித்திரன் அவனைப்பார்த்து, "இனிய உயிர்களைக் கொன்று திரிகின்ற வாழ்க்கையையுடையவள். எமனைப்போன்ற தோற்றத்தை உடையவள். அல்லாமலும், ஆயிரம் மதயானைகளின் பலத்தை ஒருங்கே பெற்றவள். இன்னும் அவள் செய்தியைச் சொல்கின்றேன் கேள்" என்று மேலுஞ் சொல்லுவான்]

மண்ணுருத் தெடுப்பினுங் கடலை வாரினும்
விண்ணுருத் திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிவரும் பாவ மீண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் தெரியும் பெற்றியாள்.

[பூமியைக் கோபித்துப் பெயர்க்கவும், கடலை வாரிக் கொள்ளவும், ஆகாசத்தைக் கோபித்து இடிக்கவும், வேண்டுமானால் அவள் செய்ய வல்லவள். அளவும் உருவும் தெரிய இயலாத பாவமெல்லாம் திரண்டு ஓர் பெண்ணின் உருவத்தைப் பெருமானால் அது எவ்வாறு தோன்றுமோ அவ்வாறு தோன்றும் தன்மையள்]

பெருவரை யிரண்டொடும் பிறந்த நஞ்சொடும்
உருமுறழ் முழக்கொடு முழித் தீயொடும்
இருபிறை செறிந்தெழு கடலுண் டாமெனின்
வெருவரு தோற்றத்தண் மேனி மானுமே.

[பெரிய மலைகள் இரண்டோடும், உண்டான விஷத்தோடும், இடியொத்த முழக்கோடும், வடவைக் கனலோடும், இரண்டு பிறைச் சந்திரன்களோடும் சேர்ந்து பொங்கி எழுகின்ற கடல் ஒன்று இருக்குமாயின்—மலைபோன்ற முலைகளையும், விஷம்போல் தீய்க்கும் கண்களையும், இடிபோன்ற குரலையும், தீக்கொழுந்துபோன்று சிவந்தமயிரையும், பிறைச் சந்திரன்போன்ற பற்களையும், கருநிறத்தையும் மிகப்பெரிய உருவத்தையும் உடைய இவளுக்கு நிகராகு மென்னலாம்]

சூடக வரவுறழ் சூலக் கையினள்
காடுறை வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்
தாடகை யென்பதச் சழக்கி நாமமே.

[கங்கணமாகப் பாம்புகளும் சூலமும் தாங்கிய கையை உடையவள். காட்டிலே வசிப்பவள். ஆடவர்களும் உன்னைக் கண்ணில் கண்டமாத்திரத்திலேயே தாம் பெண்களாக வேண்டுமென்று ஆசைப்படும்படி அழகு வாய்ந்த தோள்களுடைய இராமனே, அந்த அரக்கிக்குத் தாடகை என்பது பெயர்]

சொல்வது தீயதாடகையின் செய்தியானாலும் கோசிகன், இராமனின் அழகிலே முழுகியமனத்தனாய்க் "கண்ணில் காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்" என அவனை அழைக்கின்றான் பின் மிதிலையுறை மாதர்கள் இவன் தோள்கண்டார் தோளே கண்டாராய் நிற்கப்போகின்றனர். அது வியப்பன்று. புருடர்களும் இம்மழமகனின் தோளைக் கண்டால் காமுற்று அதனொடுபுணர்ந் தின்பம் நுகர்தற்குத் தாம் பெண்களாய் மாறிவிட ஆசைப்படுவாராயின் மாதரார்கண்கள் அதனில் அழுந்திக்கிடக்குமெனக் கூறுவானேன். இவ்விதம் வேண்டலணியால் மனங்கவர் வனப்பமை வடிவத்தின் பெருமையைப் பாராட்டிய புலவர், கம்பர் ஒருவரே அல்லர். இவ்வோரிடத்தில் மாத்திரமுமன்று. பால் மாறிப் பிறவிமாறிப் பிறர் தம்நலம் நுகர்தற் கவாவிளைக்கும் எழிலினர் இலக்கியத்தில் சிலருளர். அவர்களைப் புனைந்துரைக்குங் கவித்திறத்தைக் காணுந் தோறும் களி சிறக்கும்.

சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தையைப் "பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறும் முலையினாள்" என வருணிப்பர் திருத்தக்கதேவர். இப்புலவரே மீண்டும் மணக்கோலங் கொண்டுநின்ற இலக்கணையை,

> வாண்மதர் மழைக்க ணோக்கி
> வருமுலைத் தடமு நோக்கிக்
> காண்வர வகன்ற வல்குற்
> கண்விருப் புற்று நோக்கிப்
> பாணுவண் டாற்றுங் கோலச்
> சிகழிகை வடிவு நோக்கி
> ஆண்விருப் புற்று நின்றார்
> அவ்வளைத் தோளி னாரே.

என்றும் வருணித்துளர். கண்டோர் கருத்தழிக்கும் அழகைக் கூறுவதில் கம்பரது கூற்றும் தேவரது கூற்றும் பொருந்துமாயினும் வேறொருவிதத்தில் இது அதற்கு எதிராயிருக்கின்றது. பெண்ணொருத்தியின் பேரெழில் நோக்கிப் பிரமாதரும் அவளை மணக்குமாறு தாம் ஆண்மையுற அவாவுவார் என்றனர் திருத்தக்கதேவர். கம்பரோ, இராமனைக்கண்ட புருடர்களும் பெண்டிராகி அவன் தோள் புணர்தற்கு விழைவரெனச் சாற்றினார். பால்மாறியதன்றிச் சிந்தாமணிக்கு ஓர் ஏற்றம் கம்பரில் கண்டதாக நினைக்கவேண்டா. ஒருபெண்ணைப் பார்த்துப் பிரமாதர்களும் ஆண்மக்களாக விரும்பினரென்றால், அவளைத்தாம் அணைதற்கு ஆண்களாயில்லாத தொன்றே குறை என்னுங் கருத்துத் தொனிக்குமாகையால், இவ்வாறு புகழப்பட்டவளின் அழகுசிறக்குமெனினும் அன்னாள் கற்பிற்கு இது இழுக்கிழைத்ததாம் என்றஞ்சிக் கம்பர், புருடனின் அழகிற்கு வயப்பட்டுப் புருடரே பெண்மை வேண்டினார் என மாற்றினாரோ வென்று மேல்நோக்காக நோக்குவோர்க்குத் தோன்றலாம். கண்டவரெல்லாம் ஒருத்திக்குக் கணவராதல் இயலாது, ஆனால் ஒருவனுக்கு மனைவியர் பலர் இருத்தல் கூடும், என்னும் முறைமைநோக்கிக் கம்பர் சிந்தாமணியை இவ்வாறு திருத்தி அமைத்துக் கொண்டவரல்லர். ஏனெனில் பின் கோலங்காண் படலத்தில், சீதைக்கு மணக்கோலம் பூட்டிய தோழிமார்கள்,

> கஞ்சத்துக் களிக்கு மின்றேன்
> கவர்ந்துணும் வண்டு போல
> அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லா
> மருளினா ளழகை மாந்தித்
> தஞ்சொற்கள் குழறித் தத்தந்
> தகைதடு மாறி நின்றார்
> மஞ்சர்க்கு மாத ரார்க்கு
> மனமென்ப தொன்றே யன்றோ.

[கிளிகளுக்கெல்லாம் அழகிய சொற்களைப் பழக்கி அருளுபவளாகிய சீதையின் அழகைக் குடித்துத், தாமரையிலுள்ள களிப்பைத் தருகின்ற தேனை வாரியுண்ட வண்டுகளைப்போல், தம்முடைய தன்மையாவும் தடுமாறி (தோழியர்) நின்றார்கள். பார்க்கப்போனால், ஆண்மக்களா யிருந்தாலும் பெண்மக்களா யிருந்தாலும் இருவருக்கும் மனம் என்பது ஒரு தன்மையதுதான் அல்லவா.]

என்று கம்பர் பெண்ணெழிற்கும் பிறபெண்கள் ஆளாகிப் பேதுறும் பரிசு புகல்வதுமாகும். இப்பாசுரத்தின் ஈற்றடியில், ஆடவர் பெண்மைக்கு அவாவுதலையுற, பெண்டிரும் ஆண்மைவெஃகிப் பேதுறுவதையும், இருபாலார்க்கும் உரிய மனதின் பொதுதர்மத்துள் அடக்கி, "மைந்தர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றே அன்றோ" என்றதால், ஆணுக்கும் பெண்ணுக்கும் காமத்துறையிலும் மற்றக் குணங்களிலும் ஏற்றத்தாழ்வு கூறலாகாதென மறுத்துத்தன் உணர்வின் நுண்மையையும் அறிவின் அகலத்தையும் கலைமுதிர்ந்த கம்பர் தோற்றுவித்துத் திகழ்வா ராகின்றார்.

சீதையும் இலக்கணையும் மணக்கோலமாய் விளங்கியபோது இவ்வாறு மங்கையரும் மருள்வதான பேரெழில் பெற்று நின்றனர் என இருபுலவர்களும் எடுத்துக்காட்டியபோதிலும் சீதையின் அழகை வேறுவகையில் காணல் வேண்டும். ஆடையாலும் அணியாலுமல்ல இவளழகு மேம்பட்டது; அவை இவளுடைய இயற்கையழகை மறைக்கவே செய்கின்றன. இவளுக்குக் கோலஞ்செய்த ஆயத்தார் 'உமிழ்சுடர் நங்கை உருவினை மறைப்பது ஓராமல்'தான் செய்த பேதையர். பின்னும் இவ்வெழிலரசி அரணியத்தில் மரவுரியுந்தானுமாய் அழகிற்கு எல்லை இல்லையாம் என்று நின்றதனைக் கண்ணுற்ற சூர்ப்பநகையும்,

> "கண்பிற பொருளில் செல்லா
> கருத்தெனின் அஃதே கண்ட
> பெண்பிறந் தேனுக் கென்றால்
> என்படும் பிறருக் கென்றான்."

பெண்ணாய்ப் பிறந்த எவளும் தன்னின் அழகுடையாள் இன்னொருத்தி என இறையும் மதிக்கமாட்டாள் என்றவோர் அபவாதம் பெண்பாலற்கு இவ்வுலகத்திலுளது. அவ்வாறு தம்மின் அழகுடையவளாய் ஒருத்தி தோன்றினாலும் அது அணியாதி அலங்காரங்களால் நேர்ந்ததெனத் தம்மையே தேற்றிக்கொள்வர். இத்தகைய அவ்வியம் மாதருக்கே உரியதாதல் உண்மையல்ல வென முன், "மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்பது ஒன்றேயன்றோ" என்று மறுத்த கம்பரின் கூற்று உண்மையல்லவாயினும், அவ்வவ்வியத்தையும் கடந்த அழகி சீதை என்பதைக்,

> குயில்தொடர் குதலையோர் கொவ்வைச் செவ்விவாய்
> மயில்தொடர் இயலியாய் மருவல் நன்றென

வந்த சழக்கியின் உரையாலும் ஓர்ந்திடற்கிடமுளது.

இனி, இவ்வகைப் பால்வழுவிப் பேதுறவு எய்துதற்கொத்த பேரெழிலின் வளத்தைப் புனைந்துரைத்த

தமிழ்க்கவிகளின் கருத்திற்கு வித்தாய் வடமொழி மகாகவி காளிதாசனின் 'விக்ரமோர்வசியம்' என்னும் நாடகத்தில் ஒரு வாக்கியம் திகழக்காண்கின்றோம். தன்னைக் கவர்ந்துசென்ற கேசி என்னும் அவுணனை வென்று சிறைமீட்ட புரூரவ மன்னன்பால் அடங்காக் காதலுற்ற ஊர்வசி அவனை அடையுமாறு அபிசாரிக வேடத்தோடு தேவலோகத்திலிருந்து வந்தவள், அந்தரங்கத்தோழி சித்ரலேகையைத், "தோழி, இனியாய், இந்நீலவாடையும் தாளஆரமும் என் வடிவைப் புனைகின்றனவோ நவில்தி" என்று வினவச் சித்ரலேகை, "அம்ம! நின்னழகை வியந்துரைக்கும் உரையோ ஓராதுழல்கின்றேன். இதந்து சிந்தயாமி அபிநாம அஹம் புரூரவா பவேய மிதி" (நான்தான் புரூரவனாக இருக்கப்படாதா என்று சிந்திக்கின்றேன்—இவ்வளவே) என்று அசதியாடினாள். தஞ்சொற்கள் குழறித் தத்தம் தகைதடுமாறியவர்களில் சித்ரலேகையும் ஒருத்தி. அவளே முதல்வளாயு மிருந்திருக்கலாம்.

"ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்" என்று கூறிய இவ்வகை வேண்டலணியில் கம்பரை வெல்வதரிது. வேண்டுமெனின், ஆடவர் என்பதை ஆள்+தவர், எனப் பிரித்துத் "தவத்தை ஆள்கின்ற முனிவர்களும் நின்னைக்கண்டால் பெண்களாகித் தழுவ விரும்புவர்," எனக் கூறிக் கம்பரே கம்பரை வெல்லக் காணலாம். அல்லாது, இக்கருத்தில் அவரை விஞ்சி வெல்லமுயன்ற பிள்ளைபெருமாள் ஐயங்கார் பெரிதும் இடருற்றுழன்றார். ஏனெனில் ஐயங்கார் தன்னைத் திருவரங்கத் தெம்பிரான்பால் காதலுற்றவொரு மங்கையாய்ப் பாவித்து அகத்துறையில் பாடுவாராகி அவனது அழகும் தன் எளிமையுந் தோன்ற,

> வாராக வாமன னேயரங் காவட் டநேமிவல
> வாராக வாவுன் வடிவுகண் டான்மன் மதனுமட [கே
> வாராக வாதரஞ் செய்வனென் றாலுய்யும் வண்ணமெங்
> வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே.

[வராகாவதாரம் எடுத்தோனே, வாமனனாய் வந்தவனே, சக்கிரத்தைத் செலுத்தும் வல்லமையுடையோனே, ராகவா, உன்னுடைய அழகைப்பார்த்தால் மன்மதனுங்கூடப் பெண்ணாக ஆசைப்படுவான் என்றால், மார்பிலே வார்க்கச்சுடைய முலையாகிய என்போன்ற மாதர் உன் அழகிற்காளாகி அழியாமல் உய்கின்ற வழியுண்டோ]

என வியந்தோதியதில், ஆடவர்கிடக்க, அழகிற்சிறந்த மன்மதனே இராகவ னுருவத்தில் மோகங்கொண்டு மடவாராக அவாவினனென்றது கம்பருக்கொருபடி மேற்சென்ற கருத்தைப்போல் தோன்றினாலும், உற்று நோக்குங்கால், மன்மதன் திருமாலின் மகன் ஆதலால் அவன் ஆதரஞ்செய்த பெண்மையைப் பெற்றால் மகளே ஆகி, "நின்மகளே உன்தோளணையவேண்டும் அழகுடையோய்" என்று அரங்கனைத் தகவிலாது அழைக்கும் இகழ்வு இப்புகழ்ச்சியுள் மறைந்திருந்து அப்புலவரை வஞ்சித்த பரிசு தெரியவரும். இடபத்தளவு பருக்க முயன்ற நுணல் வீங்கி வெடித்த (Aesop's Fable) கதைபோ லாயிற்று இது.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[646-ம் பக்கத் தொடர்ச்சி]

உயிர் தவழும் உடலம்.

அவர்கள் குடியோ உயர்ந்தகுடி. அந்தக்குடியிலும் பிறந்திலாத அத்துணை உயரிய குழவி பிறக்குமானால் அந்த ஊரார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவு உண்டோ? அவ்வூரில் எங்குப்பார்த்தாலும் கொண்டாட்டந்தான். முத்தையும் மணியையும் வாரிவாரி எல்லோரும் இறைத்தனர். கொட்டு முழக்கத்தோடு குறவர்கள் கூடிக் கூத்தாடினார்கள். பிள்ளைபிறந்த திருநாளைப் பெரிய திருவிழாவாக எல்லோரும் சேர்ந்து கொண்டாடினார்கள்.

> கானவர் குலம்வி ளங்கத் தத்தைபால் கருப்பம் நீட
> ஊனமில் பலிகள்போக்கி உறுகடன் வெறியாட் டோடும்
> ஆனவத் திங்கள் செல்ல அளவில்செய் தவத்தி னாலே
> பான்மதி உவரி ஈன்றால் எனமகப் பயந்த போது.

> கரிப்பரு மருப்பின் முத்தும்
> கழைவிளை செழுநீர் முத்தும்
> பொருப்பினின் மணியும் வேடர்
> பொழிதரு மழையே அன்றி
> வரிச்சுரும் பலைய வானின்
> மலர்மழை பொழிந்த தெங்கும்
> அரிக்குறுந் துடியே அன்றி
> அமரர்துந் துபியும் ஆர்த்த.

நாகன் பிள்ளையைப் போய்ப் பார்த்தான். கையில் எடுத்தான். திண்ணென் றிருத்தலின் திண்ணன் என்ற திருப்பெயர் சாற்றினான். வேடர்கள் அது கேட்டு ஓவென ஆர்த்துத் தமது அடங்காப் பெருமகிழ்ச்சியை வெளியிட்டனர். பின்னர் வேண்டிய கடன்களை மரபு வழுவாமல் அப்போதைக் கப்போது சரிவரச் செய்து வந்தனர். அணிகலங்கள் பல அணிந்து குழந்தையை அழகுற வளர்த்து வந்தனர்.

குழந்தை குந்தியபோது ஒரு விருந்து; தவழ்ந்த போது ஒரு சிறப்பு; முழந்தாளிட்ட போது ஒரு திருவிழா; எழுந்து நின்றபோது ஒரு திருநாள். தளர்நடை யிட்டபோது ஒரு உண்டாட்டம்; மழலைமொழி தொடங்கியபோது ஒரு கொண்டாட்டம். இவ்வாறு அடிக்கடி வேடர் அனைவரையும் அழைத்து வைத்துக் கொண்டாடிப் பெரு விருந்து பண்ணி எல்லோரையும் நாகன் மகிழ்வித்தான், தானும் பெரு மகிழ்ச்சி யுற்றான். தெய்வங்களுக்குச் செய்த சிறப்புக்கும் திருவிழாவிற்கும் கணக்கில்லை. திண்ணனார் பிறந்தது முதல் அவ்வூரில் ஒவ்வொரு நாளும் திருநாளாகவே கழிந்தது. பிள்ளையைப் பெற்றெடுத்ததால் தான் அடைந்த பேரின்பத்தை இவ்வாறெல்லாம் பல வகையாலும் காட்டிக் கொண்டான். அவ்வளவு அருமையாக வளர்ந்த பிள்ளை எவ்வளவு அரச இன்பத்தில் இருந்திருக்கும் என்று நம்மால் எண்ணத்தான் போமா?

> வருமுறைப் பருவந் தோறும்
> வளமிகு சிறப்பிற் றெய்வப்
> பெருமடை கொடுத்துத் தொக்க
> பெருவிறல் வேடர்க் கெல்லாம்

திருமலி துழனி பொங்கச்
செழுங்களி மகிழ்ச்சி செய்தே
அருமையிற் புதல்வர்ப் பெற்ற
ஆர்வமுந் தோன்ற உய்த்தார்.

திண்ணனரிடத்துத் தாய்தந்தையர்களுக்கு இருந்த பரிவினை அளவிட ஒண்ணது. திண்ணனர், ஒரு சிறு புலியின் வாயில் சிறுபிள்ளைத் தன்மையாகத் தம் தளிரிளம் கையை விடுதலும் தந்தையார் நடுநடுங்கிக் கையை அப்புறப்படுத்த எண்ணினர். படபடவென்று கையை இழுத்து அப்புறம் விட்டாரா? கோல் கொண்டு அடித்தாரா? செல்வக் குழந்தைக்குச் சிறிதும் உடல் நோகலாமா? நோகாதபடி பச்சிலையைக் கொண்டு அடிப்பதுபோல அச்சுறுத்தி அப்பாற் படுத்தினராம். அன்பிலே மூழ்கிவளர்ந்த அப்பிள்ளைக்கு அதையும் பொறுக்க முடியவில்லை. அப்பாவின் முகம் சிறிது கோணிய போதே அலறி அழுது கண்ணீரை மாலைமாலையாக விட்டார். உடனே தாயார் ஓடிவந்து வாரியணைத்து முத்தாடி அழுகையை மாற்றினராம். எவ்வளவு செல்வமாக வளர்ந்தார் என்பதைக் காட்ட இஃது ஒன்று போதாதா? குறவர்களது வழக்கங்களை ஒன்றுவிடாது அறிந்த ஒரு காலங்கண்ட பாட்டி அன்றாடம் சாயுங்கால மானதும் கண்ணேறு கழிய வெண்கடுகுப் புகையைக் குழந்தைக்குக் காட்டி இறக்குவாள். பிறகு வயிறார ஊட்டிப் பின் தாலாட்டித் தூங்கவைப்பாள். பொழுது புலர்ந்ததும் நல்ல ஊனமுது படைத்துப் பின் விளையாட விடுவாள். இவ்வாறு இன்பத்தில் இன்பமாய் வளர்ந்து வந்தார் திண்ணனர்.

அதற்கும் இதற்கும் எல்லாம் விருந்தும் விழவும் செய்து வைத்த தாய்தந்தையர் வில்பிடித்த திருநாளை எவ்வளவு சிறப்பாகக் கொண்டாடி இருப்பார்கள். சோறுங் கறியும் வடித்து வேகவைத்து மலைமலையாகக் குவித்தார்கள். வந்தவர்களும் இருந்தவர்களும் மனம்போனபடி வேண்டியதை வேண்டியமட்டும் உண்டு மகிழ்ந்தார்கள். குடித்து வெறியேறிக் குதித்துக் கூத்தாடினர்கள்.

அயல்வரைப் புலத்தின் வந்தா
ருங்குடி இருப்பி னுள்ளார்
இயல்வகை உணவி லார்ந்த
எயிற்றிய ரெயின ரெல்லாம்
உயர்கதிர் உச்சி நீங்க
ஒழிவில்பல் நறவும் மாந்தி
மயலுறு களிப்பி னீடி
வரிசிலை விழவு கொள்வார்.

பாசிலைப் படலைச் சுற்றிப்
பன்மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத்தோல் கட்டிக்
கவடிமெய்க் கலன்கள் பூண்டார்
மாசில்சீர் வெட்சி முன்னு
வருநறைக் கண்ணி சூடி
ஆசிலா சிரியன் ஏந்தும்
அடற்சிலை மருங்கு சூழ்ந்தார்.

தொண்டக முரசும் கொம்புந்
துடிகளும் துளைகொள் வேயும்
எண்டிசை நிறைந்து விம்ம
எழுந்தபேர் ஒலியி னேடு
திண்டிறல் மறவர் ஆர்ப்புச்
சேண்விசும் பிடித்துச் செல்லக்
கொண்டசீர் விழவு பொங்கக்
குறிச்சியை வலங்கொண் டார்கள்.

எல்லா இன்னிசைக் கருவிகளும் அங்கு முழங்கின. அவற்ருேடுவேடர்களது ஆர்ப்பரிப்பு வானத்தைக் கிழித்துக் கொண்டு போயிற்று.

குன்றவர் களிகொண் டாடக்
கொடிச்சியர் துணங்கை யாட
துன்றிய மகிழ்ச்சி யோடும்
சூரர மகளிர் ஆட
வென்றிவில் விழவி னேடு
விருப்புடை ஏழா நாளாம்
அன்றிரு மடங்கு செய்கை
அழுகுற அமைத்த பின்னர்.

அவர்கள் எல்லாரும் இன்பத்தில் மூழ்கித் திளைத்துக் களிநடம் புரிந்தார்கள். இவ்வாறு ஒருநாள் அல்ல ஏழு நாள் விருந்து நடந்தது. அவர்களது செல்வப் பெருக்கை என்ன என்பது! கடைசிநாளில் முந்தியநாள்களை எல்லாம்விட இரண்டத்தனை சிறப்பாக விருந்தும் விழாவும் நடந்தேறின. வில்லைத் தொட்டநாளே தொடங்கித் திண்ணனர் பெரிய வில்லாளியாயினர். அவர்களது நல்லெண்ணமே இவரை இவ்வாறு உயர்த்தியது போலும்.

இவ்வாறு திண்ணனர் பதினறுண்டும் நிறையப் பெற்றார். இதற்குள் நாகனும் நரைதிரை மூப்பான் மிகுந்த தொண்டு கிழவனய்ப் போய்விட்டான். மலைநாட்டில் உள்ள ஊர்கள் எப்பொழுது செழித்து விளங்குவது? மலையிலே வாழும் வலிய விலங்குகள் ஊரில் வந்து பயிர்களையும் உயிர்களையும் வருத்தாமல் இருந்தால் அல்லவா? இதுபற்றியே மலையரசர்கள் திங்கள் தோறும் வேட்டைக்குச்சென்று விலங்குகளை ஊருக்குத் தொலைதூரத்திலேயே இருக்கும்படி அப்புறப்படுத்தி ஓட்டிவிட்டுத் தடையை மீறி வந்தவற்றைக் கொன்று குவித்து வருவார்கள். இனி அவ்வாறு வேட்டையாட நமது நாகனுக்குப் போதிய வலிவில்லை.

அங்கண்மலைத் தடஞ்சாரல் புனங்கள் எங்கும்
அடலேனம் புலிகரடி கடமை ஆமா
வெங்கண்மரை கலையொடுமான் முதலா யுள்ள
மிருகங்கள் மிகநெருங்கி மீதூர் காலைத்
திங்கண்முறை வேட்டைவினைத் தாழ்த்த தென்று
சிலைவேடர் தாமெல்லாம் திரண்டு சென்று
தங்கள்குல முதற்றலைவ ஞகி யுள்ள
தண்டெரியல் நாகன்பால் சார்ந்து சொன்னர்.

அதனல் விலங்குகள் பல்கிப்பெருகி எங்கும் பாவிப் புனத்தை எல்லாம் அழிக்கத்தொடங்கி ஊரார் வயிற்றில் அடித்தன. வேடர்கள் எல்லாரும் ஒன்ருய்த் திரண்டு வந்து நாகனிடம் முறையிட்டுக் கொண்டனர். அவனும் தான் கிழவனய்ப் போய்விட்டபடியால் தனது பிள்ளையை அவர்களது தலைவனக ஒப்புக்கொள்ளும்படி அவர்களை வேண்டிக் கொண்டான். அவன் அதைச் சொல்லத்தான் காத்துக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் ஒரே மனதாய் உடன்பட்டனர். கரும்பு தின்னக் கூலியா? அவர்கள் விருப்பம் நிறைவேறியது. உடனே திண்ணனருக்குப் பட்டம் கட்டிவைக்கவேண்டும் என வற்புறுத்தலாயினர்.

கன்னிவேட்டை யாடுவதற்காகத் தனது காதற் புதல்வன் காட்டிற்குப் போகின்ருனதலின் காட்டில் உள்ள கடவுள்களுக் கெல்லாம் பலியூட்டவேண்டித் தேவராட்டியை வரவழைத்து அவனுக்கு வேண்டியதெல்லாம் மனங்கோணது அவள் விரும்பியபடியே தந்தனுப்பினன்.

பின்னர்த் திண்ணனரை வரவழைத்தான். வந்தவரைத் தன்னேடு ஒக்கப் புலித்தோலின்மேல் அரசனக உட்காரவைத்தான். புலித்தோல்தான் வேடர் அரிமாக் கட்டில். உடைவாளும் உடைதோலும் கொடுத்துத் திண்ணனரை அரசனுக்கிப் பட்டம் கட்டினன். "இனி என் செய்வது. நமது தந்தையும் தள்ளாதவராய் விட்டார். நாம் இச் சுமையைத் தாங்காமற் போனல் இவ்வேடர் குடி என்ன ஆகும்" என்று எண்ணி இரங்கி இவர்களுக் கெல்லாம் இறைவனயினர்.

தந்தைநிலை உட்கொண்டு தளர்வு கொண்டு
தங்கள்குலத் தலைமைக்குச் சாய்வு தோன்ற
வந்தகுறைப் பாடதனை நிரப்பு மாறு
மனங்கொண்ட குறிப்பதனல் மருமை கொண்டு
முந்தையவன் கழல்வணங்கி முறமை தந்த
முதற்சுரிகை உடைதோலும் வாங்கிக் கொண்டு
சிந்தைபரம் கொளநின்ற திண்ண னர்க்குத்
திருத்தாதை முகமலர்ந்து செப்பு கின்ருன்.

மங்கல நன்னீராட்டித் தூயராய்த் தனி இருந்து பின்னர் வேட்டைக்குப் புறப்பட்டார். கிழவர் ஆயினரே தந்தையர் என்று இரங்கிப் பின் காப்பார் அற்றுக் கிடந்த கானவர்களுக்குத் தலைவராக உடன்பட்டார். அவ்வாறு அரசராயினவர் அன்றைய மறுநாளே அன்பராங் கடவுளை அடைந்தபோது எவ்வாறு மாறிவிட்டார்! என்னமாறுதல் என்னமாறுதல்! தன்னைச் செல்வமாய் வளர்த்துக் கிழவராய்ப் போயின தாய் தந்தையரை மறந்தார். கேட்பார் அற்றுக் கிடந்த வேடரை மறந்தார்; அரசையும் மறந்தார். சின்னஞ் சிறு காளை, பதினறுதான் ஆயிற்று, பழுத்த துறவியாய்ப் பட்டினி கிடந்து அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அன்பருக் கன்பனும் ஆண்டவனையே நோக்கி நின்று இமையொடு இமைகொட்டாது இறைவனையே எண்ணி ஒருமுகப்பட்ட நிலை எவ்வளவு அரியது. "ஊசியின் காதில் ஒட்டையானது புகுந்தாலும் ஒருவேளை புகும். செல்வவான் வானகத்தில் நுழைவது அரிது அரிது" என்ருர் ஏசுகிறிஸ்து என்ற அறிஞர். கண்ணப்பரோ செல்வமலிந்த நலமதிலே செல்வவான்களுக்கு இடையிலே, செல்வத்திற் சிறந்த அரசர் குடியிற் பிறந்து எல்லோரும் சீராட்டிப் பாராட்டிச் செல்வத்திலேயே வளர்ந்து, செல்வம் மிகுந்த அரசனே ஆனதும் செல்வத்தை அடியோடு மறந்து சிவனேடு ஒன்றுபட்டுச் சிவனே யானமை நாம் கேட்டிராத கதை, நாம் பார்த்திராத கதை. நாம் படித்திராத கதை. இஃதன்ருே வியப்பினும் வியப்பு. இதனை வற்புறுத்தவன்ருே சேக்கிழார் இதுவரையும் வளர்த்தி வளர்த்தி விரித்துரைத்தார். புத்தரும் அரசராய் இருந்து துறந்து போயினர். ஆனல் அவர் பலநாள் காட்டில் திரிந்து அறிஞர் ஆயினர். அவர் பிறந்த குடியும் அறிவிற்சிறந்த குடி. திண்ணனர் பிறந்ததோ அறிவிற் சிறுத்த குடி. ஆனல் அரசைத் துறந்து அன்பரை அடைந்ததும் அறிஞர்களுக் கெல்லாம் அறிஞர் ஆயினர். இதுவன்ருே திண்ணனரின் சிறப்பு.

T. P. மீனுக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 34.

நள வெண்பா

(648-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

கடப்பா ரெவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்னன்—நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனைத்தே விதியின் வலி. 52.

கருத்து:—விதியின் கொடுமையால் நளன் தமயந்தியோடு காடு நோக்கிப் புறப்பட்டான் என்பதை இச்செய்யுள் கூறுகின்றது. அவ்வாறு அவன் போம்போது மாவிந்தநகரமக்கள் பிரிவிற்காற்ருது அழுதனர் என்பது பின்செய்யுள்.

ஆருயின் ருயே யறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்ருர் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. 53.

பதப்பிரிவு:—ஆர் உயிரின் தாயே அறத்தின் பெரும் தவமே பேர் அருளின் கண்ணே பெருமானே பார் இடத்தை யார் காக்க போவது நீ யாங்கு என்ருர் தம் கண்ணின் நீர் வார்த்து கால் கழுவாநின்று.

அன்வயம்:—தம் கண்ணின் நீர்வார்த்துக் கால் கழுவாநின்று "ஆர்உயிரின் தாயே, அறத்தின் பெருந்தவமே, பேர் அருளின் கண்ணே, பெருமானே, பார் இடத்தை யார் காக்க நீபோவது, யாங்கு?" என்ருர்.

பதவுரை.

தம் - தங்களுடைய
கண்ணின் - கண்களிலிருந்து
நீர் - ஜலத்தை
வார்த்து - விட்டு
கால் - (புழுதிபடிந்த நளனின்) கால்களை
கழுவாநின்று - கழுவி,
ஆர் - அருமையான
உயிரின் - உயிர்களுக்கு
தாயே - தாயாயிருப்பவனே,
அறத்தின் - தருமத்தின்
பெரும் - பெரிய
தவமே - தவப்பயனக உதித்தவனே,
பேர்- பெரிய
அருளின் - கருணையினுடைய
கண்ணே - கண்போன்றவனே,
பெருமானே - எங்கள் தலைவனே,
பார் இடத்தை - பூமியை (இனி)
யார் - யார்
காக்க - காக்கும்படிவிட்டு
நீ - நீ
போவது - போய்விடுவது?
யாங்கு - எங்குப்போகின்ருய்?
என்ருர் - என்றழுதார்.

விரிவுரை:-நளனுடைய வாய்மையைக் காட்டுவதற்கு அவனது பிரஜைகள் அவனிடம் மிகுந்த அன்புடையவர்களாயிருந்தனர் என்று கூறுவது அவசியம். புட்கானுக்குப் பயந்து அவன் போகவில்லை. சொன்ன சொல் தவறினனென்று தன் குடிகளே தன்னை இகழ்ந்து புறக்கணிப்பார்களோ என்றஞ்சியும் அவன் போனவனல்லன். 'சூதிற்

சொன்ன சொல்லிற்கு நான் கட்டுப்படமாட்டேன்' என்றியம்பி நாட்டைப் புட்கரனுக்குக் கொடுக்க மறுத்திருப்பானாயினும் ஒருவரும் குறை கூறியிரார். பின்னொரு செய்யுளில் சனங்கள், 'போகத்தான் வேண்டுமாயின் நீ இன்றொரு நாளாவது இந்நகரிருந்து நாளை ஏகலாகாதா' வென அவனைப் பரிவோடு வேண்டுவதையும் புகழேந்திப் புலவர் சொல்லிக் காட்டுகின்றார். என்வரினும் மெய்ம்மையை மெய்ம்மைக்காகவே கடைபிடிக்கும்மேன்மக்களின் தன்மையை அடுத்த செய்யுளில் காணுவோம். அப்படிப்பட்டவர்களில் ஒருவன் நளனானால் அவன் கொடுத்தவார்க்குச் சூதிலே யானாலும் அதனைக் காப்பன் என்பது நிச்சயம்.

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர். 54.

பதப்பிரிவு:—வேலை கரை இழந்தால் வேதம் நெறி பிறழ்ந்தால் ஞாலம் முழுதும் நடுவு இழந்தால் சீலம் ஒழிவரோ செம்மை உரை திறம்பா செய்கை அழிவரோ செங்கோல்அவர்.

அன்வயம்:—வேலை கரை இழந்தாலும் வேதம் நெறி பிறழ்ந்தாலும், ஞாலம் முழுதும் நடுவு இழந்தாலும், செங்கோலவர் சீலம் ஒழிவரோ, உரைதிறம்பாச் செம்மைச் செய்கை அழிவரோ!

பதவுரை.

வேலை - கடலானது
கரை - (தன்னுடைய) கரையை
இழந்தால் - கடந்து விட்டாலும்,
வேதம் - வேதங்களே
நெறி - நல்நெறியினின்று
பிறழ்ந்தால் - தவறினாலும்,
ஞாலம் - பூலோகம்
முழுதும் - முழுவதும்
நடு - நடுவாக அந்தரத்தில்
நிற்கின்ற நிலையை
இழந்தால் - இழந்து தள்ளாடினாலும்,
செங்கோலவர் - செங்கோல் செலுத்துகின்ற அரசர்
சீலம் - தமக்குரிய நல்லொழுக்கத்தை விட்டு
ஒழிவரோ - விலகுவாரோ!
உரை - சொல்லிய சொல்
திறம்பா - மாறாத
செம்மை - செம்மையாகிய
செய்கை - கருமங்கள்
அழிவரோ - கெடுவாரோ!

குறிப்பு:—இழந்தால் பிறழ்ந்தால் இழந்தால், என்னும் சொற்களுக்குப்பின் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நிற்கின்றது. வேலை கரை இழந்தாலும் வேதம் நெறி பிறழ்ந்தாலும் ஞாலம் நடுவு இழந்தாலும், உத்தம வேந்தர் சீலம் ஒழியார் செய்கை அழியார், என்பது கருத்தாதலால் உம் மூன்றும் உயர்வுசிறப்புப் பொருளில் வந்திருக்கின்றன. ஒழிவரோ அழிவரோ, என்னும் சொற்களின் இறுதியில் இருக்கும் ஓ காரங்கள் எதிர்மறைப் பொருள்தரும். இடைச்சொல் இலக்கணத்தை மறவாமல் காக்கவிரும்புவீராயின், 369, 392, 409, 449, 489, பக்கங்களை எடுத்து மீண்டுமோர் முறை கற்பின் நலமாம்.

· திறம்பா, என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

வடியேறு கூரிலைவேன் மன்னவோ வுன்றன்
அடியேங்கட் காதரவு தீரக்—கொடிநகரில் [தார்
இன்றிருந்து நாளை யெழுந்தருள்க வென்றுரைத்
வென்றிருந்த தோளான்றாள் வீழ்ந்து. 55.

பதப்பிரிவு:-வடி ஏறு கூர் இலை வேல் மன்னவோ உன் தன் அடியேங்கட்கு ஆதரவு தீர கொடி நகரில் இன்று இருந்து நாளை எழுந்து அருள்க என்று உரைத்தார் வென்று இருந்த தோளான் தாள் வீழ்ந்து.

அன்வயம்:—வென்று இருந்த தோளான் தாள் வீழ்ந்து, "வடி ஏறு கூர் இலை வேல் மன்னவோ, உன் தன் அடியேங்கட்கு ஆதரவுதீரக் கொடிநகரில் இன்று இருந்து நாளை எழுந்துஅருள்க" என்று (சனங்கள்) உரைத்தார்.

பதவுரை.

வென்று - (பகைவரை) வென்று
இருந்த - இருந்த
தோளான் - தோள்களையுடைய நளனின்
தாள் - பாதங்களில்
வீழ்ந்து - விழுந்து,
வடி - வடித்தல்
ஏறு - ஏறிய
கூர் - கூரிய
இலை - அலகு உடைய
வேல் - வேலாயுதத்தைத் தாங்கிய
மன்னவோ - அரசனே,
உன்தன் - உன்னுடைய
அடியேங்கட்கு - அடியவர்களாகிய எங்களுக்கு
ஆதரவு - ஆசை
தீர - தீரும்படி
கொடி - கொடிகள் கட்டிய
நகரில் - இந்த நகரில்
இன்று - இந்தத்தினம்
இருந்து - தங்கி
நாளை - மறுநாள்
எழுந்தருள்க - செல்வதானால் செல்க'
என்று - என்று
உரைத்தார் - (குடிஜனங்கள்) சொன்னார்.

குறிப்பு:—மன்னவோ, என்பதிலுள்ள ஓ கார இடைச்சொல் இரக்கப்பொருளில் வந்துளது.

மன்றலிளங் கோதை முகநோக்கி மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணி னீர்நோக்கி—இன்றிங்
கிருத்துமோ வென்று னிளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனத்தில் வைத்து. 56.

பதப்பிரிவு:—மன்றல் இள கோதை முகம் நோக்கி மா நகர்வாய் நின்று உருகுவார் கண்ணின் நீர் நோக்கி இன்று இங்கு இருத்துமோ என்றான் இள குதலை வாயாள் வருத்தமோ தன் மனத்தில் வைத்து.

அன்வயம்:— (நளன்), மன்றல் இளங்கோதை முகம் நோக்கி, மாநகர்வாய் நின்று உருகுவார் கண்ணின் நீர் நோக்கி, இளங்குதலை வாயாள் வருத்தமோ தன்மனத்தில் வைத்து, "இன்று இங்கு இருத்துமோ" என்றான்.

பதவுரை.

மன்றல் - வாசனைபொருந்திய
இள - மெல்லிய
கோதை - கூந்தலையுடைய தமயந்தியின்
முகம் - முகத்தை
நோக்கி - பார்த்து,
மா - பெரிய

நகர்வாய் - அந்த மாவிந்தநகரத்தில்
நின்று - எதிர்நின்று
உருகுவார் - மனங்கரைகின்றவர்களுடைய
கண்ணின் - கண்களினது
நீர் - சலத்தை
நோக்கி - பார்த்து
இள - பிள்ளைத்தன்மையுடைய
குதலை - குதலைமொழிகளால் பேசும்
வாயாள் - வாயைஉடைய தமயந்தியின்
வருத்தமோ - வருத்தத்தையே
தன் - தன்னுடைய
மனத்தில் - மனதில்
வைத்து - நினைத்து (நளன்)
" இன்று - இன்றைத் தினம்
இங்கு - இந்நகரில்
இருத்துமோ - (இச்சனங்கள் சொல்கின்றபடி)
இருப்போமோ"
என்றான் - என்று தமயந்தியை வினவினான்.

விரிவுரை:—தமயந்தி படுகின்ற துயரத்தைக் காணச் சகியாமலே நளன் ஒருநாள் அங்குத் தங்க நினைத்தான். வருத்தமோ, என்பதிலுள்ள ஓகார இடைச்சொல் ஏகாரத்தைப்போல் பிரிநிலைப்பொருளில் வந்துளது. சனங்கள் கண்ணீர்வடித்து நிற்பதைக்காண வருந்தினானேனும் நளன் தமயந்தியின் துயரிற்கே பரிந்து தானிழந்த நாட்டில் நாளொன்றேனும் நிற்கநினைத்தான். சொன்னது கபடமானாலும் புட்கரன் உரைத்ததற்கு நாம் கொண்ட பொருள்படி, மனைக்குரியாரன்று வரும் துயரம் தீர்ப்பார்.

குறிப்பு:—உருகுவார், என்பது உருகுகின்றவர்கள் என, உருகுதலாகிய வினையைச் செய்கின்றவர்களுடைய பெயரைக் குறிப்பதால், வினையாலணையும் பெயர்.

வண்டாடுந் தார்நளனை மாநகரில் யாரேனுங்
கொண்டாடி னார்தம்மைக் கொல்வமெனத்-தண்டா
முரசறையா யாங்கென்றான் முன்னே முனிந்தாங்
கரசறியா வேந்த னழன்று. 57.

பதப்பிரிவு :—வண்டு ஆடும் தார் நளனை மாநகரில் யார் எனும் கொண்டாடினார்தம்மை கொல்வம் என தண்டா முரசு அறையாய் ஆங்கு என்றான் முன்னே முனிந்து ஆங்கு அரசு அறியா வேந்தன் அழன்று.

கருத்து:—இவ்விதம் சனங்கள் நளனுக்குப் பரிவதைக் கண்ட புட்கரன் கோபங்கொண்டு, "நளனை யாரேனும் கொண்டாடினால் அவர்களைக் கொன்றுவிடுவோம்" என்று பறை அறைவித்தான். அரசாண்டறிந்திருந்தாலல்லவோ இவனுக்குச் சிறிதேனும் பெருந்தன்மை என்பது இருக்கப் போகின்றது.

அறையும் பறையரவங் கேட்டழிந்து நையும்
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி—முறுவலியா
இந்நகர்க்கீ தென்பொருட்டா வந்த தெனவுரைத்
மன்னகற்றுங் கூரிலைவேன் மன். [தான் 58.

கருத்து:—அவ்வாறு புட்கரன் அறைவித்த பறையின் சப்தத்தைக் கேட்டும், வாடித் தளர்கின்ற தமயந்தியின் அறியாமையைப் பார்த்தும் மனமழிந்த நளன், 'இந்த நகரத்திற்கு இவ்வித அவமானம் என்னாலல்லவோ வந்தது' எனத் துக்கத்தால் மருண்டு சிரித்தான்.

தன்வாயின் மென்மொழியே தாங்கினா னேங்குநகர்ப்
பொன்வாயில் பின்னாகப் போயினான்—முன்னாளில்
பூமகளைப் பாரினொடும் புல்லினால் றன்மகனைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு. 59

கருத்து:—எப்பொழுதும் தன்வாயில் மென்மொழியே பழகியுள்ள நளன் இப்பொழுதும் புட்கரனை வன்சொல்லால் ஏதும் வையாமல் தன் புதல்வனையும் புதல்வியையும் அழைத்துக்கொண்டு தமயந்தியோடு அந்நகரை விட்டுப் போய்விட்டான்.

கொற்றவன்பாற் செல்வாரைக் கொல்வான் முர [சறைந்து
வெற்றியோடு புட்கரனும் வீற்றிருப்ப—முற்றும்
இழவுபடு மாபோலில்லங் டோறும்
குழவிபா லுண்டிலவே கொண்டு. 60.

கருத்து:—நகர்விட்டுச் சென்ற நளனைப் பின்தொடர நகரவாசிகள் நினைக்க, அவ்வாறு செல்வபரைக் கொல்வதாகப் புட்கரன் மீண்டும் முரசறைவித்து மிக்க பெருமையோடு அரசிருக்க, அந்நகர வீடுகள் யாவும் இழவுபட்ட வீடுகள் போலாகிக் குழந்தைகளும் பால்குடிக்காமல் துக்கப்பட்டன.

தேவாரமும் ஐந்திணையும்.

(653-வது பக்கத் தொடர்ச்சி)

2. திணைகளின் மூவகைப் பொருள்.

நம்முன்னோர் ஆதிநாள்தொடங்கி வகித்த சமயம் சமரசமானதால், பாலை நீங்கலான நாற்றிணைத் தெய்வங்களைத் தமது பெருங்கடவுளின் அங்கங்களாக்கி அவற்றையும் தர்க்க ஒழுங்கில் வழிபட்டனர். அவ்வாறே தேவார காலத்திலும் நடந்தது. "அரியலால் தேவியில்லை ஐயனை யாறனார்க்கே" என்று பாடிய வாகீசரும், அஷ்டதிக்குப் பாலகர்களான இந்திரன், வருணன் முதலியோரையும் சிருஷ்டி ஸ்திதித் தொழில்கள் புரியும் மூர்த்திகளையும் சிவரூபமாய்க் காட்டியதைக் காண்க:—

பூவுருவின் முதலுருவா யிருநான் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்
தேவர்களு மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனி சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவிவிடுத்தா ரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற் றேமே.
—திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 6.

இவ்வாறு தமிழர் நாற்றிணையிலுள்ள மக்களிடத்துச் சமயபேத விகாதங்களுமின்றி ஏனைய சம்பந்தங்களில் ஒற்றுமையாய் வணிகம் முதலியன நடாத்தியதுபோல், அவர்களுக்கு நாளடைவிற் சன்மார்க்கத்தைப் போதித்துத் திருநெறியைத் தழுவச் செய்தனர்:—

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச் [தூய்த்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே
—சம்பந்தர்.

இதிற் காட்டியது குன்று. நெய்தலையடுத்த குறிஞ்சி நிலமக்கள் சிவபக்தராய்ச் சதிபதியாய் வழிபடுவதைப் புகலிவேந்தன் வியந்துரைத்தனர். அவ்வாறே முல்லையிலும்,

கையாற் றொழுது தலைசாய்த் துள்ளங் கசிவார்கள்
மெய்யார் குறையுந் துயருள் தீர்க்கும் விமலனார்
நெய்யா டுதலஞ் சுடையார் நிலாவு மூர்போலும்
பைவாய் நாகங் கோட லீனும் பாசூரே

என்று பாடிய சம்பந்தர் இப்பாசுரத்தின் பின்பாசுரத்தில் "பைங்கான் முல்லை பல்லரும் பீனும் பாசூரே" என்று திணையையும் காட்டினார். அந்நிலத் தெய்வமாகிய சேஷசயனனை 9-ம் பாசுரத்தில் வழக்கம்போல் பாடினார். அதையும் நோக்குக:—

நகுவாய் மலர்மே லயனு நாகத் தணையானும்
புகுவா யறிவார் புறநின் றோரார் போற்றோவார்
செகுவா யுகுபற் றலைசேர் கையா ரூர்போலும்
பகுவாய் நாரை யாரல் வாரும் பாசூரே.

நெய்தல் நிலமக்களும் சிவபக்தர்களாய் ஒழுகிய தன்மை தேவாரங்களிற் பற்பல இடங்களிற் காணலாம். தமிழ்ச் சேர்ப்பனார் அதிபத்தர் திருத்தொண்டையும் இத்தருணத்தில் நினைத்தல் அவசியமே. அப்பர் பாடிய கீழ்க்குறித்த பாசுரத்திலும் நெய்தல் நிலமக்களிலுள்ள பக்தர்களை எண்ணிப் பாடினார் போலும்:—

மடுக்களில் வாளை பாய வண்டின மிரிந்த பொய்கைப்
பிடிக்களி றென்னத் தம்மிற் பிணைபயின் றணைவ ரால்கள்
தொடுத்தநன் மாலை யேந்தித் தொண்டர்கள் பரவியேத்த
வடித்தடங் கண்ணி பாகர் வலம்புரத் திருந்த வாறே.

—திருவலம்புரம்-திருநேரிசை. 2.

பாலைத் திணையில் தெய்வமில்லை. இதனால் சுந்தரர் எம்பெருமானை நோக்கிப் "பாலையில் வந்த காரணம் யாது, நெய்தல் நிலமான திருவொற்றியூரையும் மருத நிலமான உத்தரகோச மங்கையையும் விட்டுக் கொள்ளை கொள்ளும் வேடர் வாழும் திருமுருகன் பூண்டியில் எழுந்தருளியது சுருதி, யுக்தி, அனுபவத்திற்கு முரணன்றோ?" வென்றனர்:—

வேதமோதி வெண்ணீறுபூசி
வெண்கோவணந் தற்றயலே
ஓதமேவிய வொற்றியூரையு
முத்தாநீர் மகிழ்வீர்!
மோதிவேடுவர் கூறைகொள்ளு
முருகன்பூண்டி மாநகர்வாய்
எதுகாரண மேதுகாவல்கொண்
டெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானீரே.

திருமுருகன் பூண்டி-பண்-பழம் பஞ்சரம்-7.

2 - கருப்பொருள்.

[தெய்வ முணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகைப் பிறவும் கருவென மொழிப

தொல்காப்பியம்-பொருள். 18]

இனித் தேவாரத்தில் ஐந்திணையிலுமுள்ள கருப்பொருள்களை எவ்விதமாய் நமது சமயகுரவர்கள் விளக்கினார் என்பதை அவர்கள் பாசுர வாயிலாகக் காண்போம்.

1 தெய்வம்:-குறிஞ்சி நிலத்தெய்வம் முருகக் கடவுள். (பார்த்தனுக்காகப் பன்றி பின்சென்ற வேடர் குறவர்கள் சம்பந்தி யென்று காட்டுவது போல் சுந்தரர் போற்றுகின்றார்):—

மறவ னாயன்று பன்றிபின் சென்ற
மாய னைநால்வர்க் காலின்கீ ழுரைத்த
அறவ னையம ரர்க்கரி யானை
யமரர் சேனைக்கு நாயக னான
குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவி ரியுநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே.

திருநள்ளாறு-பண்-தக்கேசி-7.

நெய்தல் நிலத்தின் தெய்வமான வருணன் சிவபக்தரான ஸ்ரீராமருக்கு எவ்வாறு சேதுபந்தன காலத்தில் அடிவணங்கி அபயம் புகுந்து இராமாயண யுத்தத்திற்குத் துணையாயிருந்தனனென்பதைத் திருநாவுக்கரசர் ஒருவாறு திருவலம்புரமென்னும் நெய்தல்நிலச் சிவஸ்தலத்தில் குறிப்பிடுவதைக் காண்க:—

செங்காண்மால் சிலைபிடித்துச் சேனை யோடும்
சேதுபந்த னஞ்செய்து சென்று புக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்க னெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கொருதன் றிருவிரலா லிறையே யூன்றி
யடர்த்தவற்கே யருள்புரிந்த வடிக ளிந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.

—திருவலம்புரம்-திருத்தாண்டகம் 10.

மருதநிலத் தெய்வமான இந்திரன் சிவபக்தனாய்த் தன்னிடர் தீர்ந்தது (ஸ்தலபுராணங்களில் காணக்கூடிய விஷயம்) தேவாரத்தில் பற்பல இடங்களிற் காணலாம்.

கந்தமா வுந்துபுகை யுந்தலில் விளக்கேர்
இந்திர னுணர்ந்துபணி யெந்தையிட மெங்கும்
சந்தம லியுந்தரு மிடைந்தபொழில் சார
வந்தவளி நந்தணவு வண்டிருவை யாறே.

—சம்பந்தர்.

முல்லைநிலக் கடவுளாகிய கண்ணனைத் திருஞானசம்பந்தர் ஒன்பது பாசுரங்களில் வைத்துப்பாடினார். "தத்துவர் தலைகண்டறிவாரிலை" என்றும், அப்பர் திருமொழியை விரிப்பான்போல் இப்பாசுரங்கள் பரமன் அளக்கலாகாத் தன்மையனென்றும் காட்டும். அவற்றுள் ஒன்று:—

விலங்கலொன் றேந்திவன் மழைதடுத் தோனும்
வெறிகமழ் தாமரை யோனுமென் றிவர்தம்
பலங்களா னேடியு மறிவரி தாய
பரிசினன் மருவிநின் றினிதுறை கோயில்...

—சம்பந்தர்.

2 உயர்ந்தோர்

கழியுளா ரெனவுங் கடலுளா ரெனவுங்
காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளா ரெனவும் மலையுளா ரெனவும்
மண்ணுளார் விண்ணுளா ரெனவும்
சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்
பழியுளார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாமே.

—சம்பந்தர்.

ஒவ்வொரு நிலத்திலுமுள்ள குடிகளில் உயர்ந்தோர் இவர், தாழ்ந்தோர் இவர் என்று

"ஏவன் மரபி னேனோரு முரிய
ராகிய நிலைமை யவரு மன்னர்" எனத்

தொல்காப்பியத்தில் காணப்பட்டிருப்பினும், அடியார்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேதம் சைவத்தி லின்மையால், ஐந்திணை உயர்ந்தோர் நாமங்களைக் குறிக்குமிடத்துத் தேவாரத்தில் பரம்பொருளாகிய சிவபெருமானையே குறிக்கப்பட்டிருக்

கின்றது. சிவபிரான் ஒவ்வொரு நிலத்திற்கும் உரியர். அதில் அவர் ஒருவரே உயர்ந்தோர். ஏனையோர் தொண்டராவர். ஆண்டானை உயர்ந்தோனென்றெடுத்து, அக்குடிகளைத் தலைவராகச் சாதியராய்த் தேவாரத்தில் சுட்டிப் பாடினர் மூவரும். ஆகவே ஒவ்வொரு திணையிலும் உயர்ந்தோர் நாமங்கள் பெற்றவர் பரமனே என்பது கீழ்க்கண்ட பாசுரங்களா லறிக:-

(1) குறிஞ்சி (வெற்பன், சிலம்பன்)

வெற்பரையன் மகளை மணந்தவர் சிவபெருமான். இவரும் கைலைவெற்பர் எனப்படுவர். 'சிலம்பரையன் பொற்பாவை நலஞ் செய்கின்ற ஈசன்' எனத் தேவாரம் புகழும். மற்றும் உதாரணங்களையும் காண்க:—

கற்பொலிதோட் சலந்தரனைப் பிளந்த வாழி
கருமாலுக் கருள்செய்த கருணை யான்காண்
விற்பொலிதோள் விசயன்வலி தேய்வித் தான்காண்
வேடுவனாய்ப் போர்பொருது காட்டி னான்காண்
தற்பரமாந் தற்பரமாய் நிற்கின் றான்காண்
சதாசிவன்காண் டன்னொப்பா ரில்லா தான்காண்
வெற்பரையன் பாவைவி ருப்பு ளான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே.

— அப்பர்.

மேலோதுங் கழுமலமெய்த் தவம்வளருங்
கொச்சையிந் திரனூர் மெய்ம்மை
நூலோது மயன்றனூர் நுண்ணறிவார்
குருப்புகலி தராய்நூ நீர்மேல்
சேலோடு தோணிபுரந் திகழ்புறவஞ்
சிலம்பனூர் செருச்செய் தன்று
மாலோடு மயனறியான் வண்காழி
சண்பை மண்ணோர் வாழ்த்து மூரே.

—சம்பந்தர்.

"தோட தணிகுவர் சுந்தரக் காதின்றூச் சிலம்பர்"

—சம்பந்தர்-(மொழிமாற்று")

(2) முல்லை. (நாடன் தோன்றல்) இத்திணையிலும் அங்ஙனமே கொள்க:—

கான வானையின் கொம்பினைப் பீழ்ந்த
கள்ளப் பிள்ளைக்கும் காண்பரிதாய
வான நாடனை வாழ் கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந் தென்னினைக் கேனே?

—சுந்தரர்.

(உ-ம்)

நாடுடைய நாதன்பா லன்றென்றுஞ்
செய்மனமே நம்மை நாளும்
தாடுடைய தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கு முடையுடைய
சாக்கியர்க்கு மூடம் வைத்த
பீடுடைய புலியூர்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றோ மன்றே?

—சுந்தரர்.

குற்ற மொன்றடி யாரில ரானல்
கூடுமாறத னைக்கொடுப் பானை
கற்ற கல்வியி லும்மினி யானை
காணப் பேணு மவர்க்கெளி யானைக்
முற்ற வஞ்சந் துறந்திருப் பானை
மூவரின்முத லாயவன் றன்னைச்
சுற்று நீள்வயல் சூழ்திரு நீடூர்த்
தோன்றலைப் பணியா விடலாமே?

—சுந்தரர்.

(3) பாலை. பாலைநிலத்தில் உயர்ந்தோனைக் காளை யென்றும், விடலை யென்றும் தொல்காப்பியம் கூறும். இவன் கள்வர்களில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவனன்றி, ஆறலைத்தல், சூறைகொள்ளல் தொழிலில் சம்பந்தமானவனாதலால், பரமனை உருவகத்தில் காட்டுதலும் கடினமான காரியமாம்.

பெண்பா லொருபாகம் பேணு வாழ்க்கைக்
கோணாகம் பூண்பனவும் நாணுஞ் சொல்லார்
உண்பா ருறங்குவா ரொவ்வா நங்காய்!
உண்பதுவும் நஞ்சன்றே? லோபி யுண்ணார்
பண்பால் விரிசடையர் பற்றி நோக்கிப்
பாலைப் பரிசழியப் பேசு கின்றார்
விண்பான் மதிசூடி வேத மோதி
வெண்காடு மேய விகிர்த னாரே.

— திருநாவுக்கரசு.

ஆதலால் கைலைமலையைப் பேர்த்தெடுக்கத் துணிந்த இராவணனைக் காளையென்றும், விடலையென்றும் கூறுவதே தக்கது. அவ்வாறே தேவாரத்தில் குறிக்கப்பட்டமை காண்க:—

காளையாகி வரையெடுத் தான்றன்
கைகளிற்றவன் மொய்தலை யெல்லாம்
மூளைபோத வொருவிரல் வைத்த
மூர்த்தி யைமுதல்காண்பரி யானை
பாளை தெங்கு பழம்விழ மண்டிச்
செங்கண் மேதிகள் சேடெறிந் தெங்கும்
வாளை பாய்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக் கத்தைமறந் தென்னினைக் கேனே?

—சுந்தரர்.

விடலை யாய்விலங் கல்லெடுத் தான்முடி
அடர வோர்விர லூன்றிய வாமாத்தூர்
இடம தாக்கொண்ட வீசனுக் கென்னுளம்
இடம தாகக்கொண் டின்புற் றிருப்பனே

— அப்பர்.

(4) மருதம். இந்நிலத்தில் வாழ்பவர்களில் உயர்ந்தோனை ஊரன் மகிழ்நன் என்பர். பரமனையும் ஊரனென்றழைப்பது மரபேயாம்:—

நீரானை நிறைபுனல் சூழ்தருநீள் கொன்றைத்
தாரானைத் தையலோர் பாக முடையானை
சீரானைத் திகழ்தரு வெண்ணிய மர்ந்துறை
ஊரானை யுள்கவல் லார்வினை யோயுமே. —சம்பந்தர்.

மழைக்கண் மாமயி லாலு மகிழ்ச்சியான்
அழைக்குந் தன்னடி யார்கட மன்பினைக்
குழைக்குந் தன்னைக் குறிகொள வேண்டியே
இழைக்கு மென்மனந் தின்னம்ப ரீசனே.

அப்பர்—திருவின்னம்பர்—திருக் குறுந்தொகை 4.

தேரூரார் மாவூரார் திங்க ளூரார்
திகழ்புன் சடைமுடிமேற் றிங்கள் சூடிக்
காரூரா நின்ற கழனிச் சாயற்
கண்ணார்ந்த நெடுமாடங் கலந்து தோன்றும்
ஏரூரா! வுலகெல்லா மொப்பக் கூடி,
யுமையாண் மணவாளா! என்று வாழ்த்தி
ஆரூரா! வாரூரா! வென்கின் றார்க
ளமரர்கடம் பெருமானே! யெங்குற் றாயே?

— அப்பர்.

(குறிப்பு-ஊரன்என்னும் பட்டம் சுந்தரர் வகித்ததையும் காண்க.)

(5) நெய்தல். இந்நிலத்தில் வாழ்பவரில் உயர்ந்தோரைப் பரதர் என்றும், சேர்ப்ப ரென்றும் மொழிவர்.

ஊர்திரை வேலையுலா வுமுயர் மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சுரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்

பங்கமேறு மதிசேர் சடையார் விடையார் பலவேத
மங்கமாறு மறைநான் கவையுமானார் மீனும் [கின்
வங்கமேவுங் கடல்வாழ் பரதர் மனைக்கே துனைமூக்
சங்கமேறி முத்த மீனுஞ் சண்டை நகராரே.

—சம்பந்தர்.

E. N. தணிகாசல முதலியார்.

(18901)

PLATO.

(A Study.)

பிளாதன்

மனக்குழப்பமும் தர்மநெறி பிறழி யொழுகலும் மேம்பட்ட தேசத்தினரிடையில் ஸோக்ரதன் தோன்றி, புலனுணர்வின் வழிச்செல்லும் லோகாயதமே, கேவல ஆசாபாசங்கள் நிரம்பிய வாழ்க்கையுட் செலுத்துவதெனவும், தெள்ளிய ஞானமாய உள்ளுணர்வே அனந்த அன்பும் தூல்விய நன்மையுமாய் மாண்புடைத்தெனவும், இவைகளின் விசேஷ குணத்தைக் குறிப்பிடாவிடினும், தான்காட்டிய நெறியைப்பற்றிப் புலனடக்கி உள்ளாராய்ந்து ஊன்றி விசாரிப்பின், ஆதியந்தமில்லாப் பரிபூரணஞானமாய், அன்பாய் இன்பமா யிருக்கின்றவொன்றை உணரலாமெனவும் அறிவுறுத்தினர். சம்பூர்ண நன்மையை (absolute good) உணர்ந்து, அமையப் பெற்றிருத்தலே வாழ்க்கை இலக்ஷியமெனப் புகட்டியபோதிலும், அது எத்தன்மையதென்பதை அவர் தெரிவிக்காததால், அவருக்குப்பின் தத்தம் அறிவுக்குத் தக்கபடி, அந்நன்மையின் விசேஷ குணத்தைச் சுட்டி யறிவிக்கத்தோன்றிய யூக்ளிதன் (Euclid) அந்திஸ்தினன் (Antisthenes) அரிஸ்திப்பன் (Aristippus) என்றவர்களில், பின் இருவருமே சற்றுப் பிரதானமாக விளங்குவதால், இவ்விடத்தில், அவர்களைப்பற்றி மாத்திரம் சுருக்கி எழுதுவோம்.

நல்ல நடத்தைகளுக்குக் காரணமாவது முற்றறிவேயென்ற ஸோக்ரதனின் கொள்கையை அவர்கள் கவனியாது, உரம், திருப்தி அல்லது தன்னடக்கம், தன்னம்பிக்கைகள் அமையப்பெற்ற அவருடைய உத்தம வாழ்க்கையிலேயே தன் மனத்தைச் செலுத்தி, அதற்கு எவ்வழி அனுகூல மானதென்றும் அதன் இலக்கணமென்னென்பதையும் அறியப் புகுந்தனர். ஒருவனுடைய நடத்தை, அவனுடைய அகப்போக்கு அமைப்புக்களின் வெளித்தோற்றமாவதென்றும், ஒருவனுடைய அகப்போக்கும் குணமும் விவேகத்தை அடிப்படியாகக் கொண்டுளதென்றும் ஸோக்ரதன் கொண்டிருந்த சித்தாந்தத்தை அவர்கள் மறந்ததாலோ, அல்லது சரியாகக் கவனித்தறியாததாலோ, அவர்களுடைய வழியும் முடிபும் பொருளும் பொருத்தமற்றதாயின. இச்சைகளை முற்றிலும் ஒழித்தேனும், அல்லாக்கால் கூடியவரையிலும் அடக்கியேனும் இருப்பின் திருப்தியும், அடக்கம் அல்லது இன்பமும் ஊறிப்பெருகுமெனத் தெரிவித்தான் அந்திஸ்தினன் என்பவன். வலி வருத்தம் ஊக்கமாகியவைகளுக்குச் சுய சுகபோகங்களே விளைநிலமாவன; நட்பு, பந்துத்வம், குடும்பவாழ்க்கை, தேசாபிமானம் என்பனவாதிகள் துக்கத்தையே பெருக்கவல்லனவாதலால், அவைகள் துறக்கப்படவேண்டும்; முற்றுந் துறக்க இயலாதார் வாழ்க்கைக்கு மிக்க அத்தியாவசியமானவைகளை மாத்திரமே தேர்ந்தெடுத்து, மனக்கலக்கமுறுமல், புலன்வழி இழுக்கப்பட்டு அலையாமல், ஜீவித்துவரவேண்டும்; இச்சைகள் அல்கவே, மனச்சாந்தியும் இன்பமும் மல்கும் என இவன் காட்டியுள்ளான்.

ஸைரினி (Cyrene) தேசத்திய அரிஸ்திப்பனின் சித்தாந்தங்களாவன:—சுகபோகங்களே வாழ்க்கைக்குப் பிரதானமானவை. போகவுணர்ச்சியைக் கிளர்த்திச் சுகத்தை யளிக்கக்கூடிய பொருள்களும், நெறிகளும், அநுபவங்களுமே பற்றத்தக்கன. முன்னவனைப்போல், இவனும் ஸோக்ரதன் வாழ்க்கையையே கவனித்துப் பின்பற்றியவன். உண்மையில் ஸோக்ரதன் உபயோக தத்வக்ஞர், (Utilitarian) அதாவது, மாந்தரின் மனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்யும் சாதனங்களும் சுகஜீவனத்திற்கு உபயோகப்படும் பொருள்களுமே நல்லன; சுகஜீவனத்திற்கு ஆதாரமாவதால், தன்னடக்கம் விரும்பப் படுவது; ஆரோக்கியத்தைப் பெருக்குவதால், தேகப்பயிற்சி வேண்டப்படுவது; அங்கத்தினனுடைய வாழ்க்கையும் தன்மையும் வகுப்பினர் தேசத்தினரின் நிலைமையிலீடுபட்டுப் பொருந்தியுளவாதலால் சுதேசாபிமானமும் தைரியமும் பலமும் தர்ம அறிவும் சிறந்து விளங்குவன, என்பனபோன்ற கொள்கைகளை யுடையவராவர். சுகாது போகங்களைத் துறத்தலே வாழ்க்கை யின்பமெனக் காட்டியவர் அந்திஸ்தினன். அரிஸ்திபனோவெனில், ஒருவனுக்குச் சுகபோகங்களை யளிக்கக் கூடியவைகளே விழுமியன என்றும் சுகபோகாநுபவமே வாழ்க்கையின் இலக்கணமெனவும் புகட்டினர். இன்னும், ஸோக்ரதனின்படி, ஒருவனும் பூர்ண அறிவுடன் தீமை புரிவதில்லை; அதாவது, ஒருவனும் தீமையைத் தீமையென அறிந்து கொண்டு தீமை யியற்றுவதில்லை. ஆதலால், ஒவ்வொருவனும் பற்றிச்செய்வது நன்மையே யென்பது தெளிவாகின்றது. இவ்வாருயின், தீமை என்று ஒரு பேயைக் கற்பித்து, அதை எதிர்த்து, அடக்கித் துரத்த வேண்டுமெனப் போதிப்பதில் விவேகமென்னையோ? சுருங்கச்சொல்லின், சுகபோகங்களுக்கு அநுகூலமாயிராதவை தீமை; பேரின்பத்தை யளிப்பதே நன்மை; பேரின்பமென்பது யாதெனில், இவ்வுலகில், தற்சமயத்தில், புலன்க ளியக்கத்தால், உணர்ச்சியால் பெற்று அநுபவிக்கும் சுகமேயாம்.

ஓர் உயர்ந்த குடும்பத்தில், ஆதென்ஸ்மா நகரில், கி.மு. 427-ம் ஆண்டில், அவதரித்தவர் பிளாதன் என்ற கலைஞானி. ஸோக்ரதனின் பிரதான சிஷ்யராக விளங்கித் தத்வப் பயிற்சிபெற்று, அவர் மரித்தபின், பற்பல இடங்களுக்குச் சென்று, வெவ்வேறு ஆசிரியரிடம் பல்வேறு கலைகள் கற்று, கி-மு-385-ம் ஆண்டுமுதல் 347-ம் வருடம் வரையிலும் ஓர் தத்வ கலாசாலை ஏற்படுத்தித் தத்வபோதகராக விளங்கினர். தன்னுடைய தத்வக் கொள்கைகளை அநுபவமூலமாக நிரூபிக்க விரும்பிச் சில சிற்றரசர்களை யணுகி, ராஜாங்க வேலைகளை ஏற்று உழைத்தனர். இவைகளினின்று எதிர்பாராத துர்ச்சம்பவங்கள்பல இவர்க்கு உண்டாயின. ஒருசமயத்தில், அடிமையாகவும் விற்கப்பட்டு, பின் வேறொரு சீமானால் மீட்கப்பட்டு, மேற்சொல்லியபடி, ஞானாசிரியராக விளங்கிச் சற்றேறக்குறைய 80-ம் பிராயத்தில் இவர் இறந்தனர்.

ஸோக்ரதனின் தர்க்க நெறியை இவர் முற்றிலும் பற்றித் தாராளமாகக் கையாண்டபோதிலும், அவரைப்போல், மானுடர் குணவொழுக்கங்களே மிக்க பிரதானமென முடித்து, ஏனையவைகளை விடுத்தவரல்லர்; இன்னும், அன்பு இன்புகளின் இலக்கணத்தை உறுதியுடன் தெளிவாகத் தெரிவிக்காது விட்டவருமல்லர். உண்மை என்பது பலவிதங்களில் தோன்றுவது, பற்பல அம்சங்கள் பொருந்தியது எனக்கொண்டு, இயற்கை செயற்கை உலகங்கள், உலகின் ஆரம்பம் போக்கு முடிவு, ஜீவனின் வளர்ச்சி தேய்வுகள், உண்மை நன்மை இனிமை, இம்மை மறுமைப் பயன்கள், முதலாயினவைகளைத் தீர்க்கமாக

ஆராய்ந்துபார்த்து, அவைகளின் பொருள் பொருத்தம் குணாதிசயங்களைச் செவ்விதின் உணர்த்த முன்வந்தனர். மெய்யறிய விரும்புபவன் அதன் சிற்சில பாகங்கள், அல்லது தோற்றங்களின்மீதே தன் மனத்தைச் செலுத்தி உழைத்தல் பிசகெனக் காட்டியவர். இன்னமும், மெய்யும் நன்மையும் இனிமையும், பொய்யும் தீமையும் விகாரமும் பிரபஞ்சாதிகளின் இணக்கத்தையே அறிவுறுத்துவன; மேலும், இப்பிரபஞ்சாதிக ளொவ்வொன்றிலும் அவைகள் ஊடுருவிப் பாய்ந்து பரிணமித்து நிற்பன; ஆதலால், ஒன்றை மற்றவைகளினின்று பிரித்தல் தெற்றுகும், அல்லது இயலாததாகும். இன்னும், பலன் உபயோகங்களை முன்னிட்டுப் பெருஞ் செயல்கள் ஒன்று இயற்றப் படுவனவல்ல. "பிரகிருதியின் போக்கும் விதிகளும் மானுட அறிவுக்கு அப்பாற்பட்டன; அவைகள் மாற்றித் திருத்தப்படக் கூடாதன; அவைகளால் மானுடராசிக்கு யாதொரு நன்மையும் விளைவதில்லை; ஆதலால், அவைகளில் அறிஞர் தலையிட்டு உழலக்கூடாது" எனக் கொண்டவர் ஸோக்ரதன். ஆனால், கவிஞராயும் தீர்க்கதரிசியாயும் பரந்து ஆழ்ந்த ஞானியாயும் விளங்கிய நமது பிளாதனோ அச்சாதனைகளைக் கண்டித்துப் பிரகிருதிசாஸ்திரி, எழிற்கலைஞன், அறவோன், தத்வக்ஞன், யாவரும் சமப் புகழ்ச்சிக் குரித்தானவர்களே; அவர்களி லொவ்வொருவரும் இவ்வுலகாதிகளைக் கூறுபடுத்தி, அவரவர் திறமைக்கேற்றபடி ஆராய்ந்து கிரஹித்துப் பிரபஞ்ச மர்மங்களை உணர்ந்தறிந்து வெளியிடுகிறார்கள் போலும். எனினும், அகண்ட உண்மை, நிரதிசய நன்மை, நித்ய இன்பம் என்பன ஒருதலை சார்பான நோக்கம் ஆராய்ச்சி விசாரிப்புக்களினின்று உண்டாவனவல்ல: அறிந்து உணரப்படுவனவல்ல; எழிற்கலை, அறம், ஞானம் என்றவைகளின் இணக்கமே சத்தின் லக்ஷணம் அல்ல, சத் என்பது அவைகளின் இணக்கம் மாத்திரமல்ல; அவைகளுக்கும் மேலானது, பரிபூர்ணமானது. இன்னும், இவ்வுலகாதிகளிடையில், மனிதன் ஓர் அங்கம், அல்லது உறுப்புப் போல் விளங்குபவனாயினும், அவன் எல்லாவற்றுடனும் ஒன்றுபட்டுச் சம்பந்தித்து நிற்பவன்; இயற்கை விதிகளுக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டியிருப்பினும், அவைகளை மாற்றித் திருத்திப் புதுக்கிப் பெருக்கிச் சேர்த்துப் பிரித்து நூதனவிஷயங்களைக் கண்டுபிடித்து, உன்னதச் செயல்களியற்றி உய்தற்கான சக்தி பொருந்தியவன். இக்கொள்கைகளை யுடையவர் இவர்.

தெளிவும் பொருத்தமுமற்ற உள்ளுணர்வு, அல்லது திடசிந்தனைகளே ஞானத்திற்கான நெறியென ஸோக்ரதன் காட்டியதை இவர் அங்கீகரித்து, ஆனால், அவரைப்போல், குணநடத்தைகளை மாத்திரம் அறிய முயற்சிக்காது, உலகாதிக ளெல்லாவற்றுள்ளும் தன் மனதைச் செலுத்தி, "உண்மைப்பொருள் யாது?" என்பதை ஐயந்திரிபற ஓர்ந்தறிந்து பார்த்துச் சித்தாந்தப்படுத்த முன்வந்தனர். பழைய ஞானிகளின் முடிவுகளை ஆராய்ந்து ஆலோசித்து, கொள்வனகொண்டு விடுப்பன விடுத்து, அகாத மதியூகத்தாலும் ஆழ்ந்துவிரிந்த சுய விசாரிப்பினாலும் விசாலக் கல்வியாலும் பலதிறப்பட்ட அநுபவத்தாலும் பிரபஞ்ச விநோதத்தையும் வாழ்க்கைப் பயனையும் தெளிவித்த பெரிய ஞானியாம் இவர்.

ஹெராக்ளிதனுடைய (இவர்களைப்பற்றி வேறோர் இடத்தில் சுருக்கிக் கூறியுள்ளோம்) கொள்கையான த்விஜகுணம் பொருந்திய கணக்கற்ற பொருள்களின் மாற்றங்களே சத் என்பதை ஒருவாறு அங்கீகரித்தவராலும், அம்மாற்றங்களுக்கெல்லாம் மேலாகவும் தோற்றங்களுக்கெல்லாம் அடிப்படையாகவும் விளங்கும் மூலவஸ்து ஒன்றேயெனவும், அம் மாற்றந் தோற்றங்களெல்லாம் அம்மூலவஸ்துவின் இயக்கங்களெனவும்; புலனுணர்ச்சிகள் மாத்திரம் நம்பத்தக்கனவல்ல வென்பதென்னெனில் அவைகள் அறையுங் குறையுமாய்த் தீமையும பிழையுஞ் செறிந்த நூற்றுக்கணக்கான அபிப்பிராயங்களுக்கே (opinion) இடந்தருவன வெனவும்; அவ்வபிப்பிராயங்கள் பன்மையையுஞ் சீரின்மையையும் தோற்றுவிப்பனவாயிருக்க, ஞானமே (Wisdom) ஒற்றுமையையும் ஒழுங்கையும் நிரூபிப்பதெனவும் நமது பிளாதன் தெரிவித்தனர்.

மூலவஸ்து ஒன்றாய், நித்தொந்தமாய், சலன மற்றதாயிருப்பது; மாற்றங்களும் தோற்றங்களும் உண்மையில்லையென்ற பார்மினிதன் கொள்கையின் முற்பாகத்தை ஒப்பிப் பின்னதை மறுத்தனர். மூலவஸ்துவைப் பற்றிய அறிவுக்குக் காரணமாவன தோற்றங்களே; வஸ்துவில்லாது சாயலில்லை, சாயல் மூலமாகத்தான் வஸ்துவின் இருப்பையுங் குணாதிசயங்களையும் அறியமுடியும் எனக் காட்டியுளார்.

முற்றறிவு, அல்லது பரஞானத்தினின்றே பிரபஞ்சாதிகள் வெளிப்பரவின என்ற அனக்ஸகோரனின் முடிபை இவர் அங்கீகரித்து, அது முழுநன்மை ததும்பப்பெற்றதெனவும், அம்முழு நன்மை யெய்தியதுடன் லயிக்கவே ஜீவகோடிகளெல்லாம் இயங்கி வருகின்றனவெனவும் சுட்டி யறிவித்துளார்.

(தொடரும்) T. R. இராஜகோபால்.

காந்திமதி என்னும் காந்தாரநாட்டுக் கட்டழகி.

(644-வது பக்கத் தொடர்ச்சி)

30. கம்மியன் வனைந்த கவசம்.

பெண்ணுந் தாயுமாய்க் கருணாகரர் தம் மனைநின்றும் மிக விரைந்து அகல நேர்ந்தபோது, தாம் போவதையும் போகும் இடத்தையும் போவதற்குக் காரணத்தையும் கலாநாதனுக்குச் சொல்லிப்போக நேரமில்லாதாயிற்று. ஆதலால், காளிகோட்டத்தின்முன் மகோதரனை வென்று, காந்திமதியின் வசைக்குப் பயந்துநின்ற கலாநாதன், மாதுலனுவார் கருணாகரர் தன் பெண்ணுடன் இவனுக்காகப் பரிந்துபேசுவதாக வாக்களித்துப்போனபடி, மறுநாள் காலையில் தந்தையின் நன்முகத்தையும் மகளின் சிறுநகை தவழ்ந்தொழுகும் மென்மொழியையும் எதிர்பார்த்துக் கருணாகரர் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். சேர்ந்தவனுக்கு அங்கு எதிர்ப்பட்டவள் கிழவி தனபாக்கியமே. கலாநாதனைக் கண்டதும் இவள் வயிறெற்றி வாயறைந்து பொருள்படாச் சொற்களா லலறினள். கலங்கினன் கலாநாதன். எத்துணை தேற்றி அவளை உற்றது சொல்லெனக் கேட்டாலும் அவள் புலம்பலோயாததற்கு வெகுண்டனன். "பாவி, பாவி, நான் பாவி, கால்வைத்த விடம் இப்படியா பாழாக வேண்டும்," என ஆற்றுவான் ஒருபோது. "உன் தலையில் மைந்தா, இப்படியும் எழுதலாமா!......நான்கு மூஞ்சிப் பார்ப்பா

னொருவன் என்னருமைக் காந்திக்கும் இந்த விதி கொடுத்தானே!......இந்தத் துக்கத்தை யெல்லாம் பார்க்காமல் என் காதிற்குப் பதிலாகக் கண்தான் போயிருக்கப் படாதா......" என்று இன்ன பல விம்மி விம்மி நெட்டுயிர்ப்பு வீங்குவாள் மறுபோது. இன்னவாறு இவள் ஏங்கக் கண்டும், அதற்குக் காரணம் உணர இயலாத கலாநாதன் பித்தேறியவன் போலாகி, "நடந்ததைச் சொல்கின்றாயா, அல்லது உன் நரைத்தலையை யுடைக்கட்டுமா" வென்று கைத்தடியை ஓங்கவே, தனபாக்கியம், "இந்தச் சூரத்தைத்தான் கண்டேன்!... கிழவி தலைக்குக் கையோங்குகின்றாய், பாவி........... உனக்கு வந்த கதி போதாது......அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறாயா, இந்த உத்தமர்......... அந்தப் பாவி கருணாகரர் பண்ணிவைத்தது இத்தனையும்!" என அழுபவளாயினாள்.

உற்றதைத்தான் உரைக்கவருகின்றாள் என்றெண்ணிய கலாநாதன் ஆவலுடன், "என்ன பண்ணிவைத்தார் கருணாகரர், சொல் சொல்?" என்றனன்.

"ஊரார் முன்னெல்லாம் என்னை அந்தச் சுடுமூஞ்சி, கிழவி என்றும் பிணமென்றும் அவமதித்துக் கூப்பிட்டுக் கூப்பிட்டு, நான் எல்லாருக்கும் இளைத்தவளானேன். இல்லாவிட்டால் கையை ஓங்குவாயா நீ. சீ! சீ! உன் மூஞ்சியைக் கொண்டுபோய் உன் உலையிலேயே வைத்துப் பொசுக்கு!"

இப்படி வைவதும் புலம்புவதுமாய்க் காலதாமதஞ் செய்த செவிட்டுக் கிழவியினிடமிருந்து நடந்த செய்தியைத் தெரிந்துகொள்ள கலாநாதனுக்கு வெகுநேரமாயிற்று. "சற்றுமுன்தான் யாரோ ஒரு பாவி வந்து கருணாகரரையும் பெண்ணையும் உடனழைத்துப் போய்விட்டான்...........ஐயயோ, பெருங்குன்றந்தான் போயிருக்கவேண்டும்........போனபிறகு மடத்துச் சேவகர்கள் வந்து இடமெல்லாம் பூட்டி முத்திரையிட்டுத் தகப்பனும் பெண்ணும் மடத்ததிகாரிகளிடம் வந்து தம்மைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு கட்டளைக் காகிதமும் கதவில் ஒட்டிவிட்டுப் போனார்கள்," என்னும் இவ்விஷயத்தைத் தனபாக்கியம் தன் முறைப்படி சிறுசிறு கூறுகப் பல சொற்களிடையே சொல்லிக் 'கெட்டது, இனி, உன்குடி, என்குடி, எல்லார் குடியும்' என ஓலமிட்டாள். நெட்டுயிர்ப்பு வீங்காதாகையால் இடிவிழுந்த மரம்போல் இதைக்கேட்ட கலாநாதன் நின்றான் என்று சொல்வதற்கில்லை.

இன்னநிலையில் தன்மனை திரும்பிய கலாநாதன் பெரிதும் வருத்தமுற்றுச் சிலநாட்கள் கழித்தான். காந்தி சென்றது பெருங்குன்றமே என்று தனபாக்கியம் சொன்னாளாயினும், ஆதாரம் சிறிதுமின்றித் தன் அபிப்பிராயம் கூறும் அக்கிழவியின் தொழிலை அறிந்துள இவன் அதனை முற்றிலும் நம்பவில்லை. தன்னின் வதந்தி ஏதேனும் கருணாகரர் அனுப்புவாரோவென மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். அதுவும் ஒருநாள் வந்தது. கலாநாதனுக்குச் செய்தியைத் தெரிவிப்பதாகக் கருணாகரருக்கு உரைத்த மொழியைச் சந்திரசேகரர் மறந்திலர். கருணாகரர் பொருங்குன்றம் போனதையும், காந்திமதி தன்வயின் இருப்பதையும், பின் அவன் சித்ரமோகன மாளிகைக்குப் போவானென்பதையும் கலாநாதனுக்குத் தெரிவிக்கத் தன் படகோட்டியை அவர் அனுப்பினார். அவனோ நரபாலனுக்கு வயப்பட்டிருந்ததால் அன்னான் கட்டளையால் கலாநாதனுக்கு ஒன்றுங் கூறாமலே யாவுங் கூறிவிட்டதாகப் பொய் புகன்றுவிட்டான். ஆனால், காந்திமதியும் அவன் பொருட்டுச் சித்ராங்கனும் சித்ரமோகன மாளிகைக்கு நாம் முன்கண்டவிதம் போவதற்கிருந்தபோது, ஒருவேளை எப்படியோ அவளைத் தேடித்திரிந்து கலாநாதன் அங்கு வந்துவிட்டால் என் செய்வதென அஞ்சி நரபாலன், காந்திமதியும் கருணாகரரும் பெருங்குன்றம் சென்றனர் எனச் சந்திரசேகரர் சொன்னதாகக் கலாநாதனுக்குத் தெரிவித்துவர அப் படகோட்டியை ஏவினான்.

வேலுற்ற புண்ணில் கனலும் நுழைந்தாலென இச்செய்திகேட்ட கலாநாதன், தானும் பெருங்குன்றம் போவதென முதலில் நினைத்தானேனும், அங்குறை மக்களுடன் இவன்பூண்ட பகையாவும் மனதில்வரத் தனியாளாய் அவர்பால் நண்ணுதல் தக்கதன்றென வோர்ந்தான். அதுவன்றிக் காந்தியின் காதலுக்குத் தன்னோடு மன்றாடி நின்ற கந்தனே இப்பொழுது மகேந்திரப் பேரோடு குன்றத் தலைவனாயு மிருந்ததும் கலாநாதனுக்குத் தெரியவந்திருந்ததாகையால் தன்னிரு புயங்களின் வலிமையே துணையாக அங்குச்சென்று ஏதுசெய்ய இயலும்! மகேந்திரனுக்குக் கருணாகரர் நெருங்கிய நண்பராயு மிருக்கின்றார். இந்நகருழக்கிய மதச் சட்டங்களின் கொடுமை ஒடுங்குகின்றவரையில், தந்தையும் மகளும் அவ்விடம் இடரிலாமலே இருப்பார். தான்போய் இடைமுளைத்து அன்னார் அமைதியைக் கெடுப்பானேன்.........என்றிவ்வாறு பலவெண்ணிக் கலாநாதன், கருணாகரரிடமிருந்து ஏதேனும் வதந்தி வரும்வரையில் இரத்தினபுரியி லிருப்பதே நலமென நிச்சயித்து நாளும் பொழுதும் நெடிதாகக் கழித்து வந்தான். அவன் மனமோ நிலையிலில்லை. காந்தியோ சென்று கந்தனிடம் பொருந்தி இருப்பதை எவ்வாறு பொறுப்பானிவன். "கந்தனோ கன்னெஞ்சன். இளமை முதல் அவன் நாட்டம் இப்பெண்ணின்மேல் பதிந்துளது. என்னழகி யென்னமிர்தம் என்னாவி என்னாசை பின்னாகப்போய்ச் சென்றப் பேய்மகனை ஒன்றாக இன்று மதிப்பாளேல் இங்கிருந் தென்செய்வேன், நன்றல்லாப் புன்விதியேன் நான்........பஞ்சரத்துட்பட்ட பைங்கிளி போல் நைவாளை, நெஞ்சத்தி லீரமிலா நீசனவன் வஞ்சனையால், தந்தையை தன்னைக் கொலைகொண்டு சீறுங்கால், சிந்தைதள ராளோ சிறிது." என்று இவ்வாறு மாறிமாறிப் பல எண்ணங்கள் கலாநாதன் உள்ளத் திற்புகுந் தரிக்கலாயின.

உயிர் வாழ்க்கையில் ஊக்கந் துறந்தான் கலாநாதன். சிதைவுண்ட மனதை மீண்டும் கூட்டுதற்கவனுக் கியலாததாயிற்று. எந்திரம்போல் நினைவற்றுத் தன் தொழிலிலேயே காலத்தைக் கழிக்கலாயினான். மனதினின்று காந்திமதியின் நினைவை நீக்க முயன்ற இக்கம்மியன் தன் கவனத்தையெல்லாஞ் செலுத்திச் சிறந்த கவசமொன்று செய்யத் தலைப்பட்டான். இக்கவசம் முடிவடைகின்ற காலத்தில், பெருங்குன்றத் தலைவர் தம்முன் புரியும்வண்ணம் நியமிக்கப் பெற்றிருந்த விஜயதசமி போரிற்கு முதல்நாள் வந்தது. சித்ரமோகன மாளிகையில் 'நிலமகள் திருமணமும்,' 'திரிசங்குத் தாண்டவமும்' கண்ட நாள் இந்நாளே. குன்றினைப் பிரித்தாண்ட இருதிறத்தோரும் தத்தம் போர் வீரர்களுடன் இரத்தினபுரி வந்து சேர்ந்திருந்தனர். போரிற் குரித்தாய முயற்சிகளெல்லாம் தாழாமல் நிகழ்வுற்றன. அற்றைப் பகல், பருத்துயர்ந்த போர்ப்படைஞனொருவன், கலாநாதனின் உலைக்களத் தருகுவந்து அவன் செய்திருந்த வேலையை உற்றுநோக்கி நின்றான். வந்துநின்ற புதியோன் வஜ்ரதர மரபைச் சேர்ந்தவன் என்பதைக் கண்ட கலாநாதனின் கோபம் பொங்கியது. பொங்கியதெனினும் இவனோ டிகல்கொண்டு சீறுவதால்

ஆவ தொன்றுமில்லை எனச் சும்மாவிருந்த கலாநாதனை வந்த வீரன், "கோணக்கால் கம்மியன் என்பார்களே, அன்னான் நீயேயோ?" என வாய்கூசாது வினவினான்.

"கோணிய முதுகோடு வெளியாக விரும்புவார் இங்குவந் தென்னை அவ்வாறு அழைப்பர்" என்று கலாநாதன் கழறித் தன் கையிருந்த சம்மட்டியைப் பார்த்துப் பற்களைக் கடித்தான்.

"வெகுளாது பேசையா......நல்ல கவசம் ஒன்று வேண்டுமென்று நான் உன்னிடம் வாங்க வந்திருக்கின்றேன்.........இருந்தால்........."

"விற்பதற் கொன்றுமில்லை."

"இருக்கின்ற திருக்கின்றது. நின் கையில் இதோ தீர்வடைந்து வருகின்றதே அக்கவசத்தைத் தந்தால் ஏற்ற விலை தருகின்றேன்."

"இக்கவசத்தை அணிதற் குரியவன் நீயல்லன். என்னவிலை கொடுத்தாலும் இதையுனக்கு விற்கமாட்டேன்."

"நான் தக்கவன் அல்லன் என நின்னுடன் வாது செய்ய நேரமில்லை. எனினும் இக்கவசம் வேண்டுவது எனக்காக அல்ல. எந்தலைவன் மகேந்திரன் நாளைச் சமரில் அணிதற்கே கேட்கின்றேன்."

"ஆயின், நண்ப, இது மார்க் கவசம். உன் தலைவனுக்குக் கவசம் வேண்டுவது முதுகிற்கென்று நினைக்கின்றேன். அது யான் செய்வதில்லை" எனக் கலாநாதன் எள்ளிச் சிரித்தான். குன்றினின்று வந்துள மறவனுக்குச் சீற்றமேலிட உலைக்கள அனலும் நீறாகியதென விழித்தான். விழித்துப், "புன்தொழிற் கம்மியா, மகேந்திரனையோ நீ இவ்வாறு பழுதுரைத்தாய். உன் வாயை இங்ஙனே கிழித்தெறியாமலகல்வேனோ நான்" என உருமவே, கலாநாதன் குந்திய நிலையையும் கீழ்க் குனிந்த நோக்கையும் தவிர்ந்து எழுந்தவுடன், வஞ்சினங்கூறிய குன்றத்தவன் அவனது தோளையும் மார்பையும் தசையின் வலியையும் வீரத்தோற்றத்தையும் தெரியக் கண்டானாகையால் சூரம் சிறிதுகுன்றி, "நாளை விஜயதசமி யானதாலன்றோ நானுன்னை இன்று சும்மா விட்டுப் போகின்றேன்," என்று உரைக்குமுரை முடியா முன்னே மீளும் வழிதேடினான். கலாநாதன் அவனைத் தடுத்து, "விரையவேண்டா, நின்னை மலைய நான் நினைத்திலேன். மானம் உண்டாயின் உன் தலைவன் மகேந்திரனையே யானிழைத்த வசைமறுத் தென்னோடு போர்செய்யச் சொல்" என்றனன்.

"வஜ்ரதரத்தலைவன் கம்மியனுடன் தனிப்போர் புரியத் தகுமோ. உலைப்புகை மயக்கத்தால் இவ்வாறு புகன்றனைபோலும்."

"இதைக்கேள். உன்தலைவன் எனக்குத் தாங்கரிய தீங்கொன் றிழைத்துளான். அப்பழி தீர்க்கவே யானிது வேண்டுகின்றேன். நாளைப் போரில் அவன் நமனிற்கு ஆளாகாது மீள்வானாயின், பின்னாள் என்பால் அவனைச் சமர்செய்ய வேண்டுகின்றேன். இத்தூது நீ அவனுக்கு உரைக்க இசைவாயாயின், இடிவிழுந்தாலும் உடையாத இக்கவசத்தை இன்றே அளிக்கின்றேன், பெற்றுக் கொள்."

"குற்றமொன்று இழைத்தானென்றால் குலத்திற்குக் குறைகாணேன். உன்னோடு உடன்று வாட்போர்புரிந்து உற்றபழி கழியுமாறு நானே மகேந்திரனைத் தூண்டுவேன்."

"எனின், இக்கருவியைப் பணயமாகக் கொள். இதைக்கொண்டு உன் தலைவனுக்குக் கொடு. நாளை பிழைத்தும் அவனென்னோடு அடுத்தநாள் போர்செய்யத் தாழ்வானாயின் உலகெங்குந் தூற்றிவிடுவேன்."

"வீண் சங்கைவேண்டா. யான் இச்செய்தியை அவனுக்குத் துணையாய் வந்துள என்போன்ற மற்ற வீரர்களுக்குஞ் சொல்லி, எல்லோருமாய் அவனிடஞ் சென்று, உன்னோடு அவன் பின்னாள் போர்செய்ய இசையானாயின் நாங்களும் விஜயதசமிப் போரிற் கலக்க இணங்காது மறுப்போமெனப் புகன்றிடுவோம். ஆதலால் நீ வேண்டும் போர் கிடைத்தல் நிச்சயம்."

"இவ்வுறுதிமொழிக்கு மிக்க வந்தனம். நீயும் இவ்வுடைவாளை என் கைப் பரிசாகப் பெற்றுக்கொள்" என்று கலாநாதன் வாளொன்றளித்து, "இதோபார், பிடருக்கும் தோளிற்கு மிடையே இப்படிக் குத்துவாயானால், எதிர்த்துவந்தவன் இருந்த விடத்தில் மரித்தான்" என அவ் வாளைப் பயிலும் விதமும் அவனுக்குக் கற்பித்தான்.

கவசமும் வாளும் பெற்ற அப்போர்வீரன் வந்தனமளித்து அகன்ற பிறகு கலாநாதன் தனக்குள், "நான் செய்துள கவசங்களிலெல்லாம் சிறந்ததைக் கொடுத்துவிட்டேன். என்னோடு இகல்வதற்கு அவ்வமர்க் கோழைக் கந்தன் இசையாமற் போனாலோ!......வருவனெனில் எம்மிருவரில் விஞ்சியவர் காந்திமதிக்கு உரியவராய் நிற்கலாம். காலமாருதர் கைவேலோ நீண்டது. அதற்கே இரையாயினும் ஆவன். மற்று வெல்வனெனின் செருக்குற்றுத் தன் கைத்திறத்தை என்பால் காட்டப் புகுந்தாலும் புகலாம்......நல்லதாயிற்று" என்று ஐயமும் அமைதியும் கொண்டவனாய், இருந்த விடம் விட்டகலாது உலைக்களத் தருகில் சமைந்து விட்டான். அந்தியும் வந்து கழிந்தது. இராவிலும் ஏழெட்டு நாழிகைகள் ஆய்விட்டன. உலை நெருப்பணைந்து நீறு பூக்கக் கனலொளியு மில்லாது இருளிற் கலைந்தழிந்த கலாநாதனின் மனநிலையை என்னென்றுரைப்பது. இடையிடையே உலைபூத்த சாம்பர் பறக்குமாறு நெடிதுயிர்த்தான். "காந்தி, காந்திமதி, காந்தார நாட்டுக் கட்டழகி. என்னையும் நீ வஞ்சித் தகன்றனையே. உன்பால் எனக்குள காதலின் ஆர்வத்தை அவமதித்தனையே. குன்றக் கயவன் கந்தனோ உனக்குக் கடையில் அன்பனாயினான்! அவனாளும் செல்வத்தை நச்சி நீ என் செய்தாய், பிச்சி, என்னுள்ளத் தரசியா யமர்ந்திருப்பதொழிந்து அவன் காட்டும் மண்ணையும் கல்லையும் மிதித்தற் காவுகின்றாய்! அடி, பேதாய், இன்றுநான் இப்பாழ்மனையில் கரைந்துருக நீ வஜ்ரதர னரண்மனையில் வீற்றிருந்து நாளை அவன் கதி என்னாம் கொல் என்று தளர்கின்றாய் போலும்......இரு இரு, என்னரசி, நீ இரு. காலமாருதனுக்குத் தப்பினாலும் உன்னருமை மணாளன் என்னொரு வாளின் குறிக்கு விலகிப் போவானோ, காண்" எனச் சிரித்தவாய் மூடுமுன் சோர்ந்து போயினான்.

அந்தச் சமயம், கருணாகரரும் பெருங் குன்றத்தினின்று மகேந்திரனுடன் வந்து இரத்தினபுரியில்தான் இருந்தார். ஆனால், தனது அரிய இரகசியத்தை மகேந்திரன் அவரிடம் சொல்லிவைத்ததிலிருந்து, கருணாகரரைக் காவலிற் கொண்டதுபோல் அவர் எங்கும் போகாமல் யாருடனும் பேசாமல் பார்த்துக்கொண்டான். ஆகையால் இரத்தினபுரியில் இருந்தும் கருணாகரரால் கலாநாதனைச் சந்திக்க இயலாமற்போயிற்று. சந்தித்திருந்தால் சரித்திரம் எவ்விதத்தில் மாறி இருக்குமோ.

T. N. சேஷாசலம்.

அகப்பொருள் வரலாறு

[416 - வது பக்கத் தொடர்ச்சி]

[416 - வது பக்கத் தொடர்ச்சி]

வரைவு கடாதல்.

இவ்வாறு இடையூறுகள் பலவற்றானும் பலநாள் தலைவனை எய்தப்பெறாத தலைவி ஆற்றாளாய் ஊணுறக்க மொழிந்து படருற்று மெலிந்து கவினலனழியக்கண்ட பாங்கி, தாய்மார் இவ்வேறுபாட்டை நோக்கி ஐயுற்றோர்ந்து உண்மையை அறிந்தாற் படுமேதங் குறித்து அவளை ஆற்றுவிக்கக்கருதி, அவளைத் தனித்ததோர் பொழிலகத்தே அழைத்துச்சென்று, அசோகமரத்தடியிற் பச்சிளம் புல்லணையில் தன்னருகிருத்தி, "மஞ்சளகஞ் சூழ்ந்த பிறைநுதற்பேதாய்! நீ இவ்வாறு வருந்துவது சிறிதுந் தகாதுகாண். இக்களவொழுக்கம் செவ்விதன்றென நான் உங்களைப் பன்முறை வருட்டியும் நீங்கள் தெளியாது உம்முள்ளம் போனவாறே ஒழுகலுற்றீர். ஆயினும், முறைப்படி உன்னை அவர் மணம்புரிந்துகொள்ளுங்காறும், உனது கள்ளக்கலவியை பிறரறியாவண்ணம் கரந்தொழுகுதலே நேரிதாம். காமங் கைம்மிகக் கழிபடருற்றுக் கலங்கிக் கலுழ்வது கன்னியர்க்கழகோ? அன்றியும், சந்தேகமெழாமற் காத்தற்கு அவர் உன்னைக்காண இங்குச் சிலநாள் வாராமலிருப்பதே நலம். இவ்விடையீட்டால் ஒருவேளை அவர் தெருண்டு உன்னை வரைந்துகொள்ள விரைந்துவரினும் வரலாம். உம்மை முதன்முதற் கூட்டிவைத்த பால்வரை தெய்வம் கூடிய சீக்கிரத்தில் உமது வதுவை மணத்தையும் முன்னின்று முட்டின்றி முடித்துவைக்கும். அதுகாறும் உள்ளழிந்துடையாது ஆற்றியிரு." என்று பொருள் பொதிந்த கட்டுரை பல கழறித் தலைவியைத் தேற்றினள். அதைக்கேட்டுத தலைமகள், "இழுக்கலுற்றவழி ஊற்றுக்கோலென உதவும் என்னின்னுயிர்த் தோழீ! நான் படுந்துயரை உன்னையன்றிப் பிறரெவரிடம் முறைப்பேன்? உன்னையன்றி எனக்கினியார் இனியார்? ஒரு கணமும் பிரியேனென்று பொய்ச் சூளுரைத்துப் பேரன்புகாட்டிப் பின் கைவிட்டகன்ற பெருந்தகையை நினைந்து நேற்று நான் பேதுற்ற நெஞ்சினளாய்க் கண்ணீர் வாரக் கலுழாநின்றேன். அப்பொழுது அன்னை கதுமெனவந்து, என்னை அடிதொட்டு முடிகாறும் உற்று நோக்கி, என் 'நீ இவ்வாறு முகம்வாடி கண்கலங்க அழுகின்றாய்? உற்றதை ஒளியாதுரை' என்றாள். மாற்றம் இன்ன துரைப்பதென்று அறியாது சற்றுத் தயங்கிப் பின் 'முன்னாள் யாம் கடற்கரையில் இப்பியைக் கொண்டு சிற்றில்கோலி மணற்சோறட்டு வண்டலம் பாவைக்கு வதுவையாற்றி விளையாடிக் கொண்டிருக்கையில் அலைபுரண்டுவந்து ஆண்பாவையை அடித்துக் கொண்டு போயிற்று. துணையைப்பிரிந்து தனித்துநின்ற பெண்பாவையை நினைக்க என்னையறியாது மனங்கலங்கிக்கண்ணீர் சோர்ந்தது' என்றேன் நான். அதனை அவள் நம்பாதாள் போலவும், நமது அருமறையை அறிந்தாள் போலவும் மீண்டும் என்னை மேனியெங்கும் உற்றுநோக்கி மேலொன்றும் பேசாது போய்விட்டாள். இனி இதனை நற்றாயும் பிறரும் அறிந்தால் யாது விளையுமோ, அறியேன். அதுகிடக்க, கரடியும் புலியுஞ் சிங்கமுந் திரியுங் கொடுங்கானை நள்ளிருளில் அபாயமின்றிக் கடந்து தலைவரிங்கே வரினும்,

> சொரிந்தசொல் வாயன்னை ஞாளி யிவ்வூர்விழி
> துஞ்சிடா; ஊர்த்
> திரிந்தவெங் காவலர் சீறுவர்; கான்றிடுந்
> திங்கள்நிலா ;
> வரிந்தமென் கொங்கை, குடிஞையுங் கோழியும்
> வாயடையா;
> பிரிந்தநம் மன்னரை நானினிக் காணப்
> பெறுவதுண்டே.

இன்னுங்கேள். நேற்றிரவில் நான் நெடுநேரந் துயிலெய்தப் பெறாது விடியற்காலத்திற் சற்றசர்ந்து கண்ணைமூடினேனாக, அப்பொழுது கனவொன்று கண்டேன். என்னை மாலூட்டி மதிமயக்கி உள்ளங் கவர்ந்தகன்ற கள்வர் என் பள்ளியறைக்குள் மெள்ளப் புகுந்து என்னருகே வரக்கண்டு நான் அவரைச் சிக்கெனயாத்துச் சிறையிலிடக் கருதிக் கையை நீட்டினேன்; கையிலகப்படாது அவரோடக்கண்டு பிடிப்பதற்குப் பின்தொடா எழுந்தேன்; உடனே கண்விழித்தேன்; கனவென உணர்ந்தேன். நனவினில் வந்து நல்காக் கொடியவர் கனவினில் வந்து இவ்வாறென்னை நலிவது ஏனோ? எனது சாயலையும் நாணத்தையுந் தாம் கைக்கொண்டு மாறாக எனக்கு நோயும் பசலையுந்தந்த தலைவர் செய்கையை அறிந்து உற்றாரும் ஊராரும் இனி அலர் தூற்றி என்னைப் பழிக்கத் தலைப்படுவர். நான் எவ்வாறினி இங்கு ஆற்றியிருப்பேன்? அவரது ஊரை வினவிச் சென்றுற்று அவர் கருத்தையறிந்து அங்கே உடனுறைதல்,அல்லது அவர் கைக்கொண்டு சென்ற எனதுமனதை மீட்டுக்கொண்டு வருதல், இவ்விரண்டினி லொன்றைச் செய்யத் துணிந்தேன், தோழீ. நீயும் என்னுடன் வா. அன்றேல், நீ அவரிடஞ்சென்று என்னிலையை அவர்க்குணர்த்தி, என்னிடத்து அவர்க்கன்பு மாறாதிருக்கக் கண்டால், சீக்கிரம் வந்து என் பெற்றோருடன் பேசி என்னை வரைந்துகொள்ளும்படி அவரைவணங்கி வேண்டினேனென்று கூறி, அவர் கருத்தை அறிந்துவா." என்று சொல்லி விடுத்தாள் தோழியை.

அதைக்கேட்ட தோழி தலைவியினது காதலினளவைச் சோதித்தறிய எண்ணித் தலைவனைப் பழித்துரைக்கப் புகுந்து, "வெளுத்ததெல்லாம் பாலெனக் கருதிப் பருகவிரும்பும் பிள்ளைமதியாய், அவர் பொய்யும் வஞ்சமும் பொதிந்த வன்னெஞ்சரென்றும், அவரை முழுதும் நம்பாதேயென்றும் நான் பலகாலுனக்கு எச்சரிக்கை செய்திருக்கிறேன்.

> தோணல முண்டு துறக்கப் பட்டோர்
> வேனி ருண்ட *குடையோ ரன்னர்;
> கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
> சூடின ரிட்ட பூவோ ரன்னர் ;

என்பதை நீ அறிந்திலையே. நீயும் அவரை மறந்தொழிந்து விடுவதே நீ இனிச் செய்யத்தகுங் காரியம். நான் சென்று அவரைக் காண்பதுவும், கண்டு பேசுவதும் எவ்வாறியலும்? கண்டு பேசினும் உன்கருத்து முற்றுமென்ற நம்பிக்கை எனக்கில்லை. அவரிடத் தாசையை அறவே விட்டொழி." என்றாள்.

அதற்குத் தலைவி, "முன் நீ சொன்னதையுஞ் செய்ததையும் முற்று மறந்து இப்பொழுதிவ்வாறு என்னை ஏசுவதும் அவரைப் பண்பல சொல்லிப் பழிப்பதும் எனக்கு மிகவும் வியப்பைத் தருகின்றன. காமக்கடலைக் கடந்து நான் இன்பத்துறையை எய்துவதற் கிதுகாறும் புணையாயிருந்து துணைபுரிந்த நீ, பார்தாக்கப் பக்குவிட்ட படகைப்போல, என்னை நட்டாற்றில் கவிழ்த்துவிடுவது நியாயமா? வெந்த புண்ணில் வெங்காரமிடுவது போல் இவ்வாறென்னை நோவச்செய்யாதே. எப்படியாவது அவருடைய நன்மணத்தை எனக்குக் கூட்டிவைத்து எனதுயிரையும் நங்குலத்தின் பேரையுங் காப்பதுன் கடமை" என்று பரிந்து கூறினள். அதைக் கேட்ட தோழி, "நான் உன் கருத்தை அறிவதற்கு இவ்வாறு சொன்னேனேயன்றி, நமக்குள் வேற்றுமை என்றேனு முண்டோ? நீ விரும்பியவண்ணம் செய்து முடிக்கின்றேன். சிறிதும் நீகவலைப்படாதே" என்று அவளைத் தேற்றி அழைத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினள்.

தன்னை இவ்வாறு குறையிரந்த தலைவிக்குக் குறைநேர்ந்த தோழி தலைமகனை எங்கு, எப்பொழுது, எப்படிக் காண்பதென்று சிந்தித்து, ஒருவேளை அவன் அன்றிரவு வழக்கம்போல் பயின்ற குறியிடத்து வாக்கூடுமென்று நினைத்து, அங்கேசென்று வெகுநேரங் காத்திருந்து அவன் வரக்காணாது மீண்டாள். மறுநாளும் அங்கேசென்று அவனைக்காணாது பிற குறியிடங்களிலும் நாடிப் பார்க்கலுற்ற தோழி அவனை எதிர்வரக்கண்டு, நல்வரவு கூறி, வலங்கொண்டு பணிந்து, "ஐய, என் உமது வரவு அத்திப்பூப்போல அருமையாய்விட்டது? இத்தனை நாளாக உம்மைக் காணப்பெறாது தலைமகள் படுந்துயரத்தை என்னென்று நான் உமக்கெடுத்துரைப்பேன்? எப்படியோ அவளது களவொழுக்கம் பலர்க்கும் வெளியாகிவிட்டது. ஊராரும் உற்றாரும் பலவகையாக அம்பலும் அலருந்தொடுத்து அவளுக்கு அணியத் தொடங்கிவிட்டார்கள். பெதும்பைப் பருவங்கடந்து மங்கைப்பருவமடைந்த அவளது அங்கவளர்ச்சியையும் முதுக்குறைவையுங்கண்டு தாய்தந்தையர் அவளது மணத்தைப்பற்றி ஆலோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதையறிந்து மகட்பேசப் பெரியோர் பலரும்வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அன்றியும் இவள், மேனி பசப்பூர்ந்து முகம்வாடி, உடல்மெலிந்திருப்பதைக் கண்டு நற்றாய், அணங்கு தீண்டியிருக்குமென்றையுற்று வேலனையழைத்து வெறியாட்டயர்விக்க ஏற்பாடு செய்திருக்கிறாள். அவன் வாக்கால் உண்மை வெளிப்பட்டு விடுமோவென்று தலைவி மிகவும் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறாள். இவை காரணமாக அவள் படுந்துயரம் ஒருபுறமிருக்க, உமக்குக் காட்டிடைக் கொடிய விலங்குகளாலும் ஊரிடைத் தன்னையன்மாராலும் நேரிடக்கூடுந் தீங்கினைக்குறித்த பெரிதுங் கவலையுற்று வருந்துகின்றாள். இவற்றுக்கெல்லாம் பரிகாரம் வேறொன்றுமில்லை. மறையோரை முன்னிட்டு நீர் எமரிடம்வந்து அவளை மணந்துகொள்ளும் விருப்பினை இசைத்தால் அவர்கள் உடனே அதை யேற்றுக்கொண்டு உமக்கு மகட்கொடை நேர்வர். மணவினைக்குரிய காலமும் இது; புனமெங்கும் வேங்கைமரங்கள் நன்றாகப் பூத்து விட்டன. அதற்கேற்ற நாளும் நணுகியது; திங்கள் ஊர்கோன் கொண்டு விளங்குகின்றது. இனிச் சிறிதுந் தாழாது அவளை வரைந்து கொள்ளும் வழியைப் பாரும்." என்று அவன் மனதை வரைவின்கண் முடுக்கினள்.

இவ்வாறு முடுக்கப்பட்ட தலைமகன் அவ்வாறு செய்வதே நேரெனத் தெளிந்து, தக்கோரைக் கொண்டு தலைமகளின் தாய் தந்தையர்களின் சம்மதத்தைப் பெற்று, அருங்கலன் விடுத்து, பின் நல்லநாளில் நல்லவோரையில் அவளை விதிப்படி வேட்டலே மாண்புடைத்தாம்.

அவ்வாறன்றித் தோழியாற் குறிக்கப்பட்ட அம்பலும் அலரும் அடங்கும் வண்ணம் தான் சிலநாள் தலைவியினூர்க்குப் போக்கொழிந்து தன்னூரிலேயே தங்கியிருந்து, பின் எதிலன் போலச் சென்று அவள் தாய் தந்தையர்களால் வரைவெதிர்கொள்ளப்பட்டு, அதன் பிறகு தலைவியை மணந்துகொள்ளலும் முறையாம். இஃது 'ஒருவழித் தணத்தல்' எனப்படும்.

இஃதன்றியும், உடனே அவளை வரைந்து கொள்வதற்காவது, சிலநாள் விட்டுப் பிரிந்திருப்பதற்காவது அவன் மனம் எளிதிலிசையாதாயின், பாங்கியினுதவியால் தலைவியை இரவின்கண் இரகசியமாக வீட்டினின்றும் வெளிப்படுத்தி உடன்கொண்டு தன்னூருக்குச் சென்று தன்னில்லில் மணவினையை முடித்துக்கொண்டு பிறகு மணமகனும் மணமகளுமாக அவளூருக்குத் திரும்புதல், அல்லது தங்கள் செலவையறிந்த தலைவியின் தமர் தம்மைப் பின்றொடர்ந்து வந்து எதிர்த்தபோது தலைவியை அவர்வசம் விட்டுத் தான் எதிர் நில்லாது நீங்கிப்பின் மீண்டு வந்து முறைப்படி கடிமணம் புரிந்துகொள்ளுதல் ஆகிய இவ்விரண்டினிலொன்றும் உண்டு. இஃது 'உடன் போக்கு' எனப்படும்.

இவ்விரண்டும் பழிப்புக்கிடமாகிய இவர்களது களவொழுக்கம் பலர்க்கும் நன்றாய்ப்புலப்பட்ட பின் நடக்கும் மணத்திறமாகலின், அது வெளிப்படுமுன் நிகழும் முன்னதைப் போல அத்துணைச் சிறப்பிலவாம். ஆயினும் இவற்றின் செய்திகளை முன்கூறிப் பின் வரைந்து கொள்ளும் முறையைக் விளக்கிக் களவியலை முடிப்பாம்.

K. இராமரத்நம் ஐயர்.

*குடை - நீரைக் குடிப்பதற்காகப் பனையோலையைக் கோலிச்செய்யும் ஒருவகைக் குடிகலம்.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
" ஆநந்த குணபோதினி "
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்
அமிர்த குணபோதினி
என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக
3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு
பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு
நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு
வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஓரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

சுகாமிர்தம்.

வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள், கிளார்க்குமார் போன்ற மூளைவேலை செய்கின்றவர்களும் பிற நோய்களால் வருத்தப்படுபவர்களும் ரஸாயன ஔஷதங்களைச் சாப்பிடத்தேவையில்லை. மிகவும் இன்றியமையாத ஔஷதம் இது. பல மூலிகைகளைக்கொண்டும், அயம், காந்தம் இவைகளைக்கொண்டும் செய்யப்பட்டுள்ளது.

1-புட்டி 48-வேளை மருந்து ரூபா 3 0 0

கீழ்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

Bhishakwara,
A. KANAKARATNAM A. M. A. C.
Late Hony. Medical Officer & Anatomy Assistant,
Govt. School of Indian Medicine.
Ayurvedalayam,
1/24 *Arunachala Naick St., Chintadripet, Madras.*

கம்பராமாயணம் பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர் ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

" கலா நிலயம் "

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத் திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி சார்ஜ் வேறு.)

மானேஜர்,

" கலா நிலயம் "

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

இந்தியாவில் கோதுமை விளைவு இந்த வருஷம் சென்ற ஐந்து வருஷ சராசரி விளைவிலிருந்து 12,11,000 டன் குறைவு. பஞ்சாபில் விளைவு மற்ற இடங்களைப் பார்க்கிலும் மிகவும் குறைவாய் இருக்கிறது.

***

பம்பாய் நகர சபையார் சைமன் கமிஷனுக்கு உதவிக் கமிட்டியாய் ஏற்பட்டிருக்கும் கல்விக் கமிட்டி கேட்டிருந்தது. கேள்விப் பத்திரத்துக்கு பதில் கொடுக்க முடியாது என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

***

ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள் இந்த மாதம் இருபத்தாறுந் தேதி, சென்னைக்கு வருவார், அவரை ரெயில்வே ஸ்தானத்திலும், அன்று மாலையிலும், வரவேற்புச் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்வதற்காக ஒரு வரவேற்புக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

***

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் 19-ஆம் ஆண்டு நிறைவு விழா இச்சபையின் 19-ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழும் விபவஞு ஆவணிமீ 9, 10 (1928ஞு ஆகஸ்டுமீ 24, 25) வெள்ளி, சனிக்கிழமைகளில் விழுப்புரம் பகுதி, ஸ்கூல் டெப்டி இன்ஸ்பெக்டர், திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B. A, L. T., தலைமையின் நடைபெறும். ஸ்ரீ. கதிரேசன் செட்டியார் முதலிய பல அறிஞர் பேசுவார்கள்.

***

தென் இந்திய சங்கீதக் கச்சேரி ஒன்று சென்ற வாரம் கல்கத்தாவில் நடந்தது. அதில் கல்கத்தாவில் உள்ள தென் இந்திய பிரபுக்கள் அனேகரும் கல்கத்தாவிலுள்ள மற்றைய வகுப்புகளைச் சேர்ந்த அனேகரும் கூடியிருந்தார்கள். ஸ்ரீமான் C. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் கர்நாடக சங்கீதத்தில் மகத்துவத்தை எடுத்துக் காட்டி கல்கத்தாவில் கர்நாடக சங்கீதம் விர்த்தி செய்வதற்காக ஒரு சங்கீத சாலை ஏற்படுத்த வேண்டுமென்று மிகவும் வற்புறுத்தி யிருக்கிறார்.

***

சென்னையில் சங்கீத சங்கம் :—முற்காலத்தில் நூல்களை ஆராய்ந்து காவியங்களின் வளர்ச்சிக்கு விளைநிலமாயிருந்த தமிழ்ச் சங்கங்களைப்போல, சங்கீத உணர்ச்சி செவ்விய முறையில் யாவர்பாலும் பரவுதற்கு ஆதாரமாய் ஓர் இசைச் சங்கம் சென்னையில் ஏற்பட்டிருக்கின்றது. இச்சங்கத்தைச் சென்ற சனிக்கிழமை, Y. M. C. A. கட்டிடத்ில்கூடிய கூட்டத்தின் முன்பு ஸர். ஸி. பி. இராமசுவாமி ஐயர் அவர்கள் ஆரம்பம் செய்துவைத்தார். அந்தச்சமயம் இச்சங்கீத சங்கத்திற்குத் தலைவராகிய, ஆனரபில், டாக்டர் U. இராம ராவ் அவர்கள், சங்கீதம் பொழுது போக்கும் கலைச்சுவையும் என்று எண்ணப்படுகிற படியைக் கடந்துவிட்டதென்றும், சனங்களுடைய நன்மைக்கு அது பலவிதத்தில் உபயோகப்படக் கூடியதாயிருக்கின்றதென்றும், பாட்டினுலேயே பல நோய்களை உபசாந்திசெய்யவும் நிவர்த்தி செய்யவும் கூடுமென்றும் எடுத்துக்காட்டி, இப்பொழுது ஏற்படும் சங்கத்தின் நோக்கங்கள் யாவை என்றும் கூறினார்.

அந்நோக்கங்களாவன :—(1) சங்கீத சாஸ்திரத்தையும் கலையையும் ஊக்கத்தோடு ஆதரித்தல் (2) வருடந்தோறும் சங்கீத ஆராய்ச்சியின்பொருட்டுக் கூட்டங்கள் கூடுதல். (3) சங்கீத சம்பந்தமான புத்தகங்கள் ஏட்டுப் பிரதிகள், முதலியவைகளைத் தேடிச் சேகரஞ்செய்து பாதுகாத்தல். (4) சங்கீதப் புத்தகச்சாலை, காட்சிச்சாலை முதலியன ஸ்தாபித்து நடத்தல். (5) சங்கீதப் பத்திரிகைகள் ஏற்படுத்திப் பிரசுரஞ்செய்தல். (6) சங்கீதப்பயிற்சியை வளர்ப்பதற்காக வெகுமதி, பொருளுதவி முதலிய அளித்தல். (7) சங்கீத வித்வான்கள் பாடகர்கள் ஆயினோர்களில் தகுந்தவர்களைப் போற்றிப் பலரறியுமாறு உதவிசெய்தல். (8) அவ்வப்போது சங்கீதக் கச்சேரிகள் நடத்துதல். (9) சங்கீதத்தில் பரிக்ஷைகள் வைத்துத் தகுதியுள்ளவர்களுக்கு நற்சாக்ஷிபத்திரம் முதலியன கொடுத்தல் (10) இந்த நோக்கங்களுடன் நிலவுகின்ற பிற சங்கங்களைத் தம்மோடு சேர்த்துக் கொண்டும் பிறவழிகளிலும் ஆதரித்தல். (11) சங்கீதசம்பந்தமான விஷயங்களில் அதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டி நேர்கின்றனவற்றை அவ்வப்போது தெரிவித்துக் கொள்ளல்.

இச்சங்கத்தைத் துவக்கிவைத்த ஸர். ஸி. பி. இராமசுவாமி ஐயரவர்கள் சங்கீதத்தின் பெருமையையும், அதனுல் ஜனங்களின் உணர்ச்சி சீர்பெற்று ஓங்குமென்பதையும், மேனுட்டிலெல்லாம் அரசாங்கத்தால் சங்கீதம் போன்ற கலைகளின்பொருட்டுப் பணத்தைச் செலவிடப் பின்படாததையும், மைசூர் மகாராஜா தற்காலம் சங்கீதத்தில் கொண்டு காட்டுகின்ற ஊக்கத்தையும் பற்றி மிக்க திறமையோடு பேசினார். அவர் முடிவாய்ப் பேசிய கட்டுரையின் சாரம் பின்வருமாறு :—

" இந்தச் சங்கத்தின் நோக்கம், சங்கீதத்தைத் தேசவாழ்க்கையின் ஒரு அம்சமாகச் செய்யும்படி இருத்தல் வேண்டும். மாணவர்களின் வாழ்க்கை இப்பொழுது பசுமையற்றவோர் பாலைவனத்திற்கு நிகராகக் கிடக்கின்றது. புத்தியின் முதிர்ச்சிக்கு உரிய கல்வித்துறைகளுக்கு இணையாக உணர்ச்சியின் வளர்ச்சிக்கு ஏற்ற கல்விப் பயிற்சியும் உடனுக நடைபெற வேண்டுமென்பது, கல்விமுறைகளில் வல்ல மேலோர்களின் கொள்கையாம். சங்கீதத்தையும் ஒவ்வொருவனது கல்வியிலும் ஒரு முக்கியமான பாகமாக ஆக்கிவிட்டால், அவ்வாறு கற்றமனிதன் பூரணனுய் விளங்கித் தன்னின் வாழ்நாளுக் குரியனவற்றை ஏற்றபடி செய்யக் கூடியவனுவான். இந்தநாட்டில், வித்தியார்த்திகளுடைய வாழ்க்கைக்கும் பொதுஜனங்களின் வாழ்க்கைக்கும் இடையே பெரும்பிளவு ஒன்று இக்காலம் அகன்று வருகின்றது. சங்கீதமேனும் காவியமேனும் சித்திரமேனும், மற்றெவ்வகைக் கலையாயிருப்பினும், அத்துறையில் தேர்ச்சியுற்ற பண்டிதரும், பயிற்சி சிறிதுடைய மாந்தரும், ஒன்றுமறியாப் பாமரரும் ஒன்றுகூடி மேற்கொண்டாலன்றி, இக்கலைகள் தமக்குரிய உயர்ந்த நிலையை எய்தித் திகழ இயலாது. ஆதலால், பொதுஜனங்கள்பால் தாம் ஆற்ற வேண்டிய கடமையைப் பண்டிதர்களும்,சாஸ்திரங்களுக்கும் கலைகளுக்கும் தாம்செலுத்தவேண்டிய கடமையைப் பொது ஜனங்களும் உய்த்துணர்ந்து ஒழுகுமாறு நடத்திவைப்பதே இச்சங்கீத சங்கத்தின் கருத்தாய் அமைதல் வேண்டும். ஒருநாட்டினது அரசியல் சம்பிரதாயங்களும் ஜனவாழ்க்கைச் சம்பிரதாயங்களும் செவ்வனே வளர்ந்தேறி வருவது எத்துணை முக்கியமோ, அத்துணை முக்கியமே, இலக்கியம் சங்கீதமாதிய கலைகளின் சம்பிரதாயம் வளர்வதும் ஆகும். இவையாவும் இயற்றிவைப்பதற்கென்றமைந்த இச்சங்கத்திற்கு யான் மனமார்ந்த ஆசிகூறி உவகையோடு உபசரிக்கின்றேன்"

18901

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of cur society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)